30th SEPTEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 51 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## பொதுத் தேர்தலிலும் ஐ.ம.சக்தி கூட்டணி தொடரும்

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி தொடருமென அக் கட்சியின்

02ம் பக்கம்பார்க்க...




# தேசிய மக்கள் சக்தியில் 15 முஸ்லிம் எம்.பீக்கள்

## பிமல் ரத்னாயக்க திட்டவட்டம்

எதிர்வரும் பொது தேர்தலில் தேசிய மக்கள் சக்தி குறைந்தபட்சம் 15 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுவாகக்கூடிய வகையில் முஸ்லிம் அபேட்சகர்களை நிறுத்துவதற்கு தயாராகி வருவதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் உதயத்துக்கு தெரிவித்தார். முஸ்லிம் புத்திஜீவிகள், வர்த்தக பிரமுகர்கள், புத்திஜீவிகள், உயர் அரச அதிகாரிகள், உலமாக்கள் என பலரை அடையாளம் கண்டு தேசிய மக்கள் சக்தி பேச்சுவார்த்தைகளை நடத்தி உள்ளது. தேர்தலில் நிறுத்தப்படும் இவர்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செய்யப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் கட்சி தீர்மானங்களை எடுக்க உள்ளது. கட்சியின் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் தெரிவு செய்வதற்கு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்னாய்க்கவிடம் கேட்டபோது

02ம் பக்கம்பார்க்க...



## கசினோ விவகாரம்: ரணிலுக்கு எதிராக மனுத் தாக்கல்

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## கெஹெலிய கைதுக்குப் பிறகும் தரமற்ற மருந்து கொள்வனவு

### சீ.ஐ.டி யில் இன்று முறைப்பாடு!

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

தரம் குறைந்த மருந்து பொருட்கள் கொள்வளவு தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டு

02ம் பக்கம்பார்க்க...

## உர, எரிபொருள் மானியங்களை நிறுத்திய தேர்தல் ஆணைக்குழு

விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியமும், மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்காக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க எடுத்த தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு

02ம் பக்கம்பார்க்க...

## காலி முகத்திடலில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் பாவித்த முக்கியஸ்தர் பெயர் பட்டியல்

ஜனாதிபதி செயலகத்திற்கு அண்மித்த வளாகத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேல் விமான தாக்குதல்கள் ஒரு மில்லியன் பேர் இடம்பெயர்வு

இஸ்ரேலின் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்கள் காரணமாக, ஏற்கனவே லெபனான் முழுவதிலும் உள்ள ஒரு மில்லியன் மக்கள் அவர்களது வீடுகளில் இருந்து

02ம் பக்கம்பார்க்க...

## தலை நகரை மாற்றும் இந்தோனேசியா

இந்தோனேசியாவின் தலைநகரை நுசன்டரா என்ற இடத்துக்கு மாற்றுவதற்கு

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## உர...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான மானியத்தை வழங்க தீர்மானித்ததன் மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை கருத்திற்கொண்டு, குறித்த மானியம் வழங்கும் ஜனாதிபதியின் தீர்மானத்தை இடைநிறுத்துவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொதுத் தேர்தலின் பின்னர் குறித்த மானியம் வழங்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

## கசினோ...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கசினோ அனுமதிப்பத்திரம் சட்டவிரோதமாக வழங்கப்பட்டதாகக கூறப்படுவதால் இதன் மூலம் அரசாங்கத்துக்கு பாரிய நிதி இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை முன்வைத்து உயர. நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று இன்று (30) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மல்கலே சுஜாத தேரரினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

500 மில்லியன் ரூபாவுக்கு கசினோ அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாகவும் இதனால் அரசாங்கத்துக்கு 85 பில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் மாரப்பன, சட்டத்தரணிகளான கௌசல்யா மொல்லிகொட மற்றும் உச்சித விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்டனர்.

## பொதுத்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பிரமுகரொருவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் முஸ்லிம் கட்சிகள் பொதுத் தேர்தலிலும் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானத்துள்ளன். தமிழ் முற்போக்கு முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகள் பலவும் பொதுத் தேர்தலில் கூட்டணியில் இணைந்து போட்டயிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி,மொட்டுக் கட்சி,சிரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் சிரேஷ்ட அரசியல் பிரமுகர்களும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

15 ஐ விட கூடுதலான முஸ்லிம்கள் வெளிவரும் நிலைமை இருக்கிறது. கூடுதலானவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். எமது மாவட்ட அமைப்புகள் செய்யும் சிபாரிசுகளின் அடிப்படையில் நாங்கள் அபேட்சகர்களை தெரிவு செய்வோம். நாங்கள் இன மதம் என பாராமல் நேர்மை, திறமை என்பவற்றை கருத்தில் கொண்டே அபேட்சகர்களை தெரிவுச் செய்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நாடளாவிய ரீதியில் முஸ்லிம் மற்றும் தமிழ் அபேட்சகர்களையும் உள்வாங்கி ஒரு தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு அக்கறை காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வார இறுதிக்குள் கட்சியின் அபேட்சகர் பட்டியல் வெளிவரும் எனவும் கட்சியின் முக்கியஸ்தரான விமல் ரத்னாய்க்க மேலும் தெரிவித்தார்.






## இஸ்ரேல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடம்பெயர்ந்துள்ளதாக அந்த நாட்டின் பிரதமர் நஜிப் மிகாடி (Najib Mikati) தெரிவித்துள்ளார்.

இது லெபனானில் நடந்திருக்கக்கூடிய மிகப்பெரிய இடப்பெயர்வு என்றும் அவர் கூறியுள்ளார்.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இஸ்ரேல் படுகொலை செய்த இரண்டு நாட்களுக்குப் பின்னர், நேற்று (29) நடத்தப்பட்ட தாக்குதல்களில் 50இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஹிஸ்புல்லாஹ் அமைப்பும் வடக்கு இஸ்ரேல் மீது அதிகமான எறிகனை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தநிலையில், உயர்மட்ட இராணுவத் தளபதி அலி கராக்கி மற்றும் மூத்த மதகுரு சேக் நபில் கௌக் ஆகியோரும் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதை ஹிஸ்புல்லாஹ் உறுதிப்படுத்தியுள்ளது.


**அசு ர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:**

**070 239 7210**


## தலை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தோனேசியா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தோனேசியாவின் தற்போதைய தலைநகராக ஜகார்த்தா இயங்கி வருகிறது. இந்நிலையில் போக்குவரத்து நெரிசல் காரணமாக தீவு பகுதிக்கு தலைநகரை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த தலைநகரை புதிதாக நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## காலி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நிறுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்குரிய வழக்கமான ஊழியர்களுக்கு இந்த வாகனங்கள் வழங்கப்படாத நிலையில், முன்னாள் ஜனாதிபதியினால் அரசியலமைப்பின் 41 (1)ஆவது சரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தனது தனிப்பட்ட ஊழியர்களுக்கு அவை வழங்கப்பட்டள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதி செயலகத்தில் அதிக வாகனங்களை நிறுத்துவதற்கு இடமில்லாத காரணத்தினால் மாத்திரமே இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இவற்றை இவ்வாறு காட்சிப்படுத்துவது நோக்கம் அல்ல எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கின்றது.

ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க அண்மையில் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம், இந்த வாகனங்களை அவசர சேவைகளுக்காக விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி அலுவலகம் மேலும் தெரிவிக்கின்றது.




# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற் குழு கூட்டம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் தீர்மானத்தினை ஏற்று கட்சியின் அம்பாரை மாவட்ட ஆதரவாளர்களை சஜீத் பிரேமதாசவுக்கு வாக்களிக்க செய்த கட்சியின் போராளிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் (28) மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்பத்தில் இடம்பெற்றது.

இதன் போது எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் அம்பாரை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்திருந்ததுடன், வேட்பாளர்கள் தெரிவு மற்றும் தேர்தல் செயற்பாடுகள் போன்றவை குறித்து அம்பாரை மாவட்ட பேராளர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தேசிய தலைவர் றிஷாத் பதியுதீன் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, கட்சியின் தேசிய கொள்கைபரப்பு செயலாளரும் அம்பறை மாவட்ட செயற்குழு தலைவருமான கே.எம்.ஏ. ஜவாத் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்த்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மேல் மாகாண ஆளுநராக ஹனீப் யூசுப் பதவியேற்பு



(அஷ்ரப் ஏ சமத்)

மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப் பட்ட ஹனீப் யூசுப் தமது கடமையை (26) பத்தரமுல்லையில் உள்ள மேல் மாகாண சபையின் ஆளுநர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், புதிய ஜனாதிபதி அநுரகுமார சகோதரர் என்னை அழைத்து மேல்மாகாண ஆளுநராக பொறுப்பேற்க அழைத்திருந்தார் அச்சமயம் நான் ஓர் வர்த்தகர் ஏன் எனக்கு இந்தப் பொறுப்பை தருகின்றீர்கள் எனக் கேட்டேன். அவர் மக்களுக்கு நாம் வித்தியாசமான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். ஆதனை நாம் மட்டும் செய்ய முடியாது இந்த மாகாணத்தில் உள்ள அரச சேவையாளர்கள் என்னுடன் இணைந்து செய்தால் நாம் வித்தியாசமான வேறுபாட்டை மக்களுக்கு ஏற்படுத்த முடியும். நாம் பழைய முறைமை விட்டு மக்களுக்கு நாம் சிறந்த சேவையை செய்வதற்கு என்னோடு ஒத்துழைக்கவும். நான் ஓர் வர்த்தகராக இருந்தும் இந்த வயதில் நாம் வாழ்ந்த நாட்டிற்கு நம்மால் நல்ல சேவை செய்வோம். எனது வர்த்தகம் சம்பந்தமான துபாய் நாட்டில் உள்ள நீதி அலுவலகங்களுக்குச் சென்றால் அங்கு முதலில் தேநீர். சிற்றுண்டி தருவார்கள். நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய சேவையை எளிதாக செய்து கொண்டு வரமுடியும். என புதிய ஆளுநர் ஹனீப் யூசுப் அங்கு குழுமியிருந்த அதிகாரிகள் மத்தியில் கூறினார்.

# தேசிய மட்டத்தில் தங்கம் வென்ற ஒலுவில் அல் -ஹம்றா மாணவன்

(இஸட்.ஏ.றஹ்மான்)

கடந்த 26 ம் திகதி மீப்பேயில் நடைபெற்ற தேசியமட்ட கணித வினாடி வினாப்போட்டியில் கிழக்கு மாகாணம் சார்பாக பங்குபற்றிய ஒலுவில் அல் -ஹம்றா தேசிய பாடசாலையின் தரம் 13 மாணவன் எம்.ஐ. முஹம்மது பத்தாஹ்ன் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டார் .

இம் மாணவனுக்கும், அதிபர் யூ.கே அப்துர்ரஹீம், பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன்,



ஆசிரியர்கள் மற்றும் ஒலுவில் மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்





வடமத்திய மாகாண ஆளுநராக வசந்த குமார விமலசிறி அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபை ஆளுநர் அலுவலகத்தில் (27) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்ட போது. (படம்:எம்.ரீ.ஆரிப்)

# கல்முனையின் இரு தேசிய பாடசாலைகளில் மாணவ மாணவிகள் அதி திறமைச் சித்தி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெளியிடப்பட்டுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் கல்முனை ஸாஹிரா தேசிய பாட-சாலையில் 21 மாணவர்களும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் 26 மாணவிகளும் சகல பாடங்களில் அதி திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும்,பாராட்டுக் களையும் தெரிவித்துள்ளனர்.

# விவசாய கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பயிற்சி பாசறை





(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய கல்லூரிகளில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு லுணுவில இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலையத்தில் தென்னை வளர்ப்பு சம்பந்தமான பயிற்சி பாசறை யொன்று அண்மையில் இடம்பெற்றது.

தென்னை மரங்களைத்தாக்கும் வண்டுகளின் தாக்கம், அவற்றிற்கான சிகிச்சை, நல்ல இன மரங்களை தெரிவு செய்தல், தெங்கு நடுகை, ஆய்வு கூட பரிசோதனை, களப் பயணம் என்பன போன்ற பல்துறைகளிலும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

# சீனன்கோட்டையில் மீலாதுன் நபி பரிசளிப்பு விழா

(பேருவளை பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலா பீடத்தின் வருடாந்த மீலாதுன் நபி விழா 29-09-2024 கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கலாபீட அதிபர் அல் உஸ்தாத் மௌலவி எம். அஸ்மீகான் (முஅயீதி) நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

கலாபீட மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதற் போது பரிசில்களும் வழங்கப்பட்டன.





கிராஅத் உடன் ஆரம்பமான நிகழ்வில் மாணவர்களது கஸீதா ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் அறபு மொழிகளிலான பேச்சு உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க பொருளாளர் அல்-ஹாஜ் ஸப்வான் நயீம், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினரும், மேற்படி கலாபீட இணைப்பொருளாருமான அல்-ஹாஜ் முஸ்னி உவைஸ், சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் இமாம் மௌலவி அஹமத் முபாரக் (மன்பயீ) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், நிர்வாகிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சீனன்கோட்டை வாழிபர் ஹழரா ஜமாஅத் உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 30 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# நேர்மையான வேட்பாளர்களுக்காக சமூகம் முன் நிற்க வேண்டும்

எதிர்வரும் நவம்பர் 14ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் நாட்டின் அரசியல் கட்சிகள் தமது அபேட்சகர்களை தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இத் தேர்தலில் இளைஞர் யுவதிகளுக்கு இடமளிப்பதற்காக இதுவரைகாலமும் பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய பலர் இம்முறை போட்டியிடுவதில்லை என அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் இப்படிப்பட்டவர்களின் தீர்மானம் வரவேற்புக்குரியது. இரு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற அரகலய போராட்டத்தின் போதான முக்கிய கோஷங்களில் ஒன்று 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்புவதாகும். அப்படி அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்படுவார்களானால் நாட்டை நடாத்துவதற்கு அனுபவம் மிக்கவர்கள் இல்லாது போகலாம். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள், சண்டாளர்களாக செயற்பட்டவர்கள் நிச்சயமாக வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். தற்போது அவ்வாறானவர்களை வீட்டுக்கனுப்புவதற்கான திறப்பு நாட்டின் வாக்காளர்கள் கைகளுக்கு கிடைத்துள்ளது. ஜனாதிபதி தேர்தலில் செயற்பட்டதைப் போன்று பாராளுமன்ற தேர்தலிலும் நாட்டு மக்கள் தகுதியானவர்களை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டும். அதேபோன்று முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் யாரை பாராளுமன்றத்துக்கு அனுப்புவது என்பது பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

பள்ளிவாயல்கள், சமூக இயக்கங்கள் மற்றும் புத்திஜீவிகள் மட்டத்திலும் இக்கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. சில எம்.பீ கள் கடந்த தேர்தலில் முஸ்லிம் வாக்காளர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள மும்முரமாக செயற்பட்டமையை அவதானிக்க முடிந்தது. எனினும் கடந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் எம். பி களின் செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தை வெட்கித்தலை குனிய வைத்தது. கடந்த அரசாங்கம் ஜனாஸாக்களை எரிக்க எடுத்த தீர்மானத்திற்கு கூட கூட்டாக எதிர்ப்பு தெரிவிக்காமல் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியை பாதுகாத்துக்கொள்ள சில எம்.பி கள் செயற்பட்டமையை சமூகம் இன்னும் மறந்துவிடவில்லை. வெளிநாட்டிலிருந்து தங்கம் கடத்தி கொண்டுவர முற்பட்டபோது விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டமை, ஒரு கட்சியிலிருந்து தெரிவாகி இன்னும் ஒரு கட்சிக்கு தாவியமை, ஜனாஸாக்கள் இருப்பின் போது சில எம்.பி களின் நடத்தை, குறிப்பாக ஜனாஸாக்களை எரிக்கவில்லை பிரேதப்பெட்டிகளை மட்டும் தான் எரித்தோம் என கூறி சமூகத்தை முட்டாளாக்க முனைந்தமை போன்றவற்றை சமூகம் இன்னும் வெறுப்புடனையே நோக்குகிறது. அரசியல்வாதிகள் எனும் போது முஸ்லிம் அரசியல்வாதிகள் புறம்பாகவே பார்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் தனது செயற்பாடுகள் குறித்து வாக்களித்த மக்களுக்கு மட்டுமின்றி படைத்த இறைவனுக்கும் பதிலளித்தாக வேண்டும். ஆகவே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மற்றும் வருங்காலத்தில் பிரதிநிதித்துவப்படுத்த இருப்பவர்கள் சிந்திக்க வேண்டும். ஐவேளை தொழுகையை நிறைவேற்றுபவர்கள் தொழுகையில் மட்டுமின்றி அன்றாட கருமங்களிலும் நேர்மையை கடைப்பிடிக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி இந்நாட்டில் ஆட்சி பீடம் ஏறி இருக்கிறது. ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஓர் அரசியல் புரட்சியை ஆரம்பித்துள்ள அவர்களுடன் இணைந்து பயணிக்க கூடிய முஸ்லிம் அபேட்சகர்களை சமூகம் தெரிவு செய்ய வேண்டும். தேச நலனை முதன்மையாக கொண்டு செயல்பட கூடியவர்கள் மற்றும் ஊழல் மோசடிகளை வெறுப்பவர்களை தமது பிரதிநிதிகளாக முஸ்லிம்கள் தெரிவு செய்ய வேண்டும். அதற்குத் தகுதியான முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு அரசியல் கட்சிகளுக்கு முஸ்லிம்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். முன்னொரு காலத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் என்றால் கௌரவமும் பெருமையும் இருந்தது. இன்று அந்த நிலை முழுமையாக மாற்றப்பட்டுள்ளது.

அந்த நிலையை மீண்டும் உருவாக்கத் தகுதி பெற்ற அபேட்சகர்களை இம்முறை பாராளுமன்ற தேர்தலில் நிறுத்துவதற்கு முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும். தமது சக்திக்கு அப்பாற்பட்டு அவ்வாறானவர்கள் தெரிவு செய்யப்படாவிட்டால் அவர்களை நிராகரிப்பதற்கு முஸ்லிம் சமூகம் தயாராக வேண்டும். இன்று நாட்டுக்கு தேவைப்படுவது ஊழலற்ற, நேர்மையான மற்றும் சமூகம் பற்றி தூர நோக்கோடு செயல்படுகின்ற அரசியல் பிரதிநிதிகள் ஆகும். அந்தப் பிரதிநிதிகளை தெரிவு செய்ய நாங்கள் இத் தேர்தலை பயன்படுத்த வேண்டும்.

# வன்னியில் சூடு பிடிக்கும் தேர்தல் களம்



**முன்னாள் ராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இம்முறையும் போட்டியிட உள்ளார்.**

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகள் கூட்டாக உருவாக்கும் கூட்டணி மூலம் தானும் இந்த தேர்தலில் போட்டியிடுவதாக முன்னாள் அமைச்சர் மஸ்தான் உதயத்துக்கு தெரிவித்தார். இதே நேரம் வன்னியில் இம்முறை தேசிய மக்கள் சக்தி சார்பில் அரச நிறுவனம் ஒன்றின் உயர் பதவி வகிக்கும் எருக்கலம்பிட்டியை சேர்ந்த ஒருவர் போட்டியிட உள்ளார்.**

**முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் என பலரும் தேர்தலில் போட்டியிட இருக்கின்றார்கள். இன்னும் ஒரிரு தினங்களில் இதன் தகவல்கள் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.**

## கெஹெலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்லவுக்குப் பின்னரும் இந்நாட்டுக்கு தரம் குறைந்த மருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விடயமாக வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இன்று குற்றப் புலனாய்வு திணைக்கள காரியாலயத்தில் முறைப்பாடு செய்துவிட்டு ஊடகங்களுக்கு இன்று கருத்து (30) தெரிவித்தார்.

இத்தகவல்களை முன் வைத்து கருத்து வழங்கிய அவர் கெஹெலிய ரம்புக்வெல்லவை கைது செய்த பின்பும் இந்தியாவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இமியூனொக்லொப்யுலின் உட்பட தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் மருந்து பொருள் விநியோக பிரிவின் வைத்திய பணிப்பாளர் தேதுனு டயசின் அறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் இவை தரமற்றவை என்பதால் தற்போது ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளதாகவும் இதற்கான தனியான விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வேண்டினார்.

மருந்துப் பொருட்கள் கொள்வனவின் போது கடைப் பிடிக்கப்பட வேண்டிய வைத்திய ஆய்வு கூட பரிசீலனைகள் மருந்து பொருள் பதிவு உட்பட சகல விதி முறைகளை மீறி இவற்றை கொள்வது செய்ய அனுமதி வழங்கிய அதிகாரிகள். தொடர்பிலும் கொள்வனவு செய்யப்பட்ட மருந்து பொருட்களின் தொகை எண்ணிக்கை மற்றும் பெறுமதிகள் விசாரணையின் பின்பு தெரியவரும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.




# இம்முறை 76 வருடங்கள் இல்லாத ஒரு புத்தாண்டைக் கொண்டாடத் தயாராகவும்

## வஸந்த சமரசிங்க வேண்டுகோள்

( ஐ. ஏ. காதிர் கான் )

"முட்டையில் கொமிஷன் எடுத்த அமைச்சர்கள் தற்போது இல்லை என்பதால், அதன் பயன் மக்களுக்குக் கிடைத்துள்ளது" என, மக்கள் விடுதலை முன்னணியின் உயர் பீட உறுப்பினர் வஸந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

கொழும்பில் (28) நடந்த ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர்,

"முன்னர் முட்டை 48 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போது, 8 ரூபா கமிஷன் வழங்கப்பட்டதாக பகிரங்க விமர்சனம் எழுந்தது. தற்போது எமது அமைச்சர்களுக்கு 8 வீதம் கமிஷன் இல்லை. இதனால் முட்டை விலை தானாக 8 ஷரூபாவினால் குறைந்துள்ளது.

எதிர்காலத்தில், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் மேலும் குறைவடையும். இதனால், 2025 இல் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

அடுத்த மாதம் இடம்பெறும் பொதுத் தேர்தலில் நாம் 2/3 பெரும்பான்மையில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்து, அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 76 வருடங்கள் இல்லாத அளவு ஒரு புத்தாண்டைக் கொண்டாடத் தயாராகுவோம்" என்றார்.



# இஹலபுளியங்குளம் அந் நஹ்லா அஹதிய்யா மாணவர்கள் நூறு வீத சித்தி

(எம்.ரீ.ஆரிப்)

அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட அஹதிய்யா இடைநிலைச் சான்றிதழ் பரீட்சை 2024 இஹலபுளியங்குளம் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலை மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளதுடன். ஆறு மாணவர்கள் சகல பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளதாக அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் எம்.ஆர். எம்.ரனீஸ் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஏ.ஐ.சுமையா, எச். எப் . ஹஸ்னா , எம்.ஏ. இமானீ , எம் எப். எப். றிஸ்னா , எம் .ஹூதா, எம்.கே.எப். நஹ்லா ஆகியோர் ஏ சித்தியினைப் பெற்றுள்ளதுடன். எம்.எம்.ஜனுல் சதா 2C, B , எம்.என்.நதிரா பர்வின் S, C,S , எம்.ஆர்.ஆய்ஷா மர்யம் B ,2A என்.எப்.சம்லா B, 2A , எம்.ஏ.அரபாத் மஜீத் C ,2A , எம்.முனாசிர் அஹமட் 3C எம். என்.எம்.முபாசிர் S, 2C சித்தியினை பெற்றுள்ளனர்.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உழைத்த அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் தலைவருக்கும் மேலதிக வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்திய பாட ஆசிரியர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகம் புத்தொளி பெறுமா

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

வைத்தியசாலை என்பது நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் இடமாக மட்டும் இருக்கக் கூடாது. அரசியல் வாதிகளின் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். வைத்தியசாலை சூழல் அழகாகவும் ரம்மியமாகவும் நோயாளிகளின் மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பேணப்பட வேண்டும்.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வளாகம் பழைய கட்டிட இடிபாடுகள் குவிந்த வண்ணம்,தகடுகள்,கம்பிகள் என்பவற்றுடன் கடந்த பல வருடங்களாக காணப்படுவது அனைவரினதும் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட கல்முனை ஆதார வைத்தியசாலை, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, காரைதீவு பிரதேச வைத்தியசாலை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை ,சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை என்பன மிகவும்அழகாக இருப்பதுடன் அதன் சூழல் நோயாளிகளுக்கு ரம்மியமாகவும் அமைந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். இதைத் தவிர அம்பாறை பொது வைத்தியசாலை ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது.





பாரிய யுத்தம் நடந்த ஒரு இடத்தில் வைத்தியசாலை அமைந்திருப்பது போல் காட்சியளிக்கும் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இனிமேலாவது புத்தொளி பெறுமா?

# அரச சேவையில் 32 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்ற தஸ்தகீர் பாராட்டி கௌரவிப்பு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையில் ஆய்வு கூட உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஐ.எல்.எம்.தஸ்தகீர்க்கான பிரியாவிடை நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் தலைமையில் பாடசாலை காசிமி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவர் 1992ம் ஆண்டு ஆய்வு கூட உதவியாளர் நியமனத்தின் மூலம் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் கடமையாற்றி 2018 ஆம் ஆண்டு இடமாற்றம் மூலம் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையில் தனது பணியினை மேற்கொண்டு அண்மையில் ஓய்வு நிலையினை அடைந்தார்.

இந் நிகழ்வில் ஐ.எல்.எம்.தஸ்தகீருக்கு பாடசாலை அதிபர் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு, வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் தலசீமியா மையம் திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தலசீமியா, ஒரு நபருக்கு அவரது பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் மரபணு நோய் ஆகும் . ஹீமோ குளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தி குருதிச்சோகை உண்டாக்குதலே இந் நோய்க் குறியாகும்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் 200 மேற்பட்டவர்களுக்கு காணப்படும் இவ் நோயானது, நாடளாவிய ரீதியில் 2000 க்கு அதிகமான குழந்தைகளை பாதித்துள்ளதாகவும் கண்டறிப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், நோயாளர்களை அடையாளம் காணல், நோயாளர்களுக்கான இரத்தமாற்று சிகிச்சை , நோய்த்தடுப்பு ஆலோசனைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் உட்பட்ட பல்வேறு வகையான நோய்தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான விசேட ஒருங்கிணைப்பின் தேவைகருதி அமைக்கப்பட்ட இவ் நிலையத்திற்கான நிதிப் பங்களிப்பினை அயர்லாந்தைச் சேர்ந்த சோனியா லிஞ்ச் என்கிற குழந்தையின் நினைவாக, பெற்றோர்கள் நண்பர்கள் மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் (IMHO) ஆகியோர் வழங்கியிருந்தார்கள். ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி , டொக்டர் எஸ்.குணராஜசேகரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற சம்பிரதாய பூர்வ நிலையத் திறப்பு விழாவில் , மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆர். முரளீஸ்வரன், மட்டக்களப்பு போதனா வைத்திசாலைப் பிரதிப் பணிப்பாளர், டொக்டர். பீ. மைதிலி உட்பட போதனா வைத்திசாலையின் குழந்தை வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், மற்றும் பிராந்திய வைத்திய அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்,

இவ் நிகழ்வினை தொற்றாநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் இ. உதயகுமார் அவர்கள் நிகழ்வினைச் சிறப்பாக ஒருங்கிணைத்து நடாத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024 விருது பெறுபவர்களை எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக அனுசரணை வழங்கும் எம்.எஸ். ஜாபிருடன் கலாபூஷணம் பரீட் இக்பால் ஆலோசனையில் ஈடுபட்ட போது...

# தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள்

## ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

( ஐ. ஏ. காதிர் கான் )

"பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள், ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்" என, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து 7 முதல் 14 நாட்களுக்குள் தபால் மூல வாக்குகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.



அதன்படி, அனைத்து தபால் வாக்காளர்களும் இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்கான தங்களின் தபால் மூல வாக்கு விண்ணப்பங்களை,நிறுவனத் தலைவரால் சான்றளித்து, தங்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்து, மாவட்டத் தேர்தல்கள் அதிகாரியிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதன்படி, 2024 செப்டம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





உக்குவல அஹதிய்யா பாடசாலை ஆசிரியை ஆசிரியர்களுக்கான சேவைக்கால கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு உக்குவல அஹதிய்யா பாடசாலை அதிபர் ஹாஜி எம்.எஸ். ஹலீம்தீன் அவர்களது ஏற்பாட்டில் அவரது உக்குவல இல்ல காரியாலயத்தில் நடைபெற்றது. இதற்கான கொடுப்பனவுகளை முஸ்லிம் கலாசார திணைக்களம் அனுப்பிவைத்திருந்தது

(உக்குவளை ஜலீல்)

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

“மகத்தான ஒரு நாளில் நிச்சயமாக அவர்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் நம்பவில்லையா?” (83:4,5)

“அந்நாளில் மனிதர்கள் யாவருமே உலகங்களின் இறைவன் முன் (விசாரணைக்காக) நின்று கொண்டிருப்பார்கள்”(83:6)

சுவனத்தில் தன் குடும்பத்தவரிடம் செல்பவர் யார்?

“மனிதனே! நீ உன் இறைவனிடம் செல்லும் வரையில் (நன்மையோ, தீமையோ பல வேலைகளில் ஈடுபட்டுக் கஷ்டத்துடன் முயற்சி செய்து கொண்டே இருக்கிறாய். பின்னர் (மறுமையில்) அவனை நீ சந்திக்கிறாய்”(84:6)

“ஆகவே (அந்நாளில்) எவனுடைய வலக்கையில் அவனுடைய வினைச் சீட்டு கொடுக்கப்படுகின்றதோ, அவன் மிக்க இலகுவாக கேள்வி கணக்கு கேட்கப்படுவான். அவன் சந்தோஷப்பட்டவனாக (ச் சுவனபதியிலுள்ள) தன்னுடைய குடும்பத்தவர்களிடம் திரும்புவான்” (84:7-9)

“எவனுடைய வினைச் சீட்டு அவனுடைய முதுகுப் புறம் கொடுக்கப்பட்டதோ அவன் (தனக்குக்) கேடுதான் என்று கூவிக் கொண்டே நரகத்தில் நுழைவான்.” (84:10-12)

“ஏனென்றால் நிச்சயமாக அவன் (இம்மையிலிருந்த காலமெல்லாம் மறுமையை மறந்து) தன் குடும்பத்தார்களுடன் மிக்க ஆனந்தமாக இருந்தான்.““ (84:13)

பூமியில் எங்கு சென்ற போதும்

“விசுவாசம் கொண்ட எனது அடியார்களே, நிச்சயமாக என்னுடைய பூமி (மிக்க) விசாலமானது. (அதில்) நீங்கள் (எங்கு சென்ற போதிலும்) என்னையே வணங்குங்கள்” (29:56)

“ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை சுகித்தே தீரும். பின்னர் நீங்கள் (விசாரணைக்காக) நம்மிடமே கொண்டு வரப்படுவீர்கள்” (29:57)

“எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்கின்றார்களோ அவர்களை நீர் அருவிகள் சதா ஓடிக் கொண்டேயிருக்கும் சுவனபதியிலுள்ள மேல்மாடிகளில் நிச்சயமாக நாம் அமர்த்துவோம். அதில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். நன்மையான செயல் புரிவோரின் கூலியும் ஒன்றே” (29:58)

“இவர்கள் (துங்களுக்கேற்பட்ட கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு தங்கள் இறைவனையே நம்பியிருப்பார்கள்” (29:59)

“(விசுவாசிகளே) நீங்கள் பொழுது புலரும்போதும், பொழுது சாயும் போதும் அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டிருங்கள்” (30:17)

“(விசுவாசிகளே நீங்கள் யாவரும்) அவன்பாலே திரும்ப வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். ஆகவே அவனுக்குப் பயந்து தொழுகையையும் கடைப்பிடியுங்கள். இணை வைத்து வணங்குவோரில் நீங்களும் ஆகிவிடாதீர்கள்” (30:31)

அல்லாஹ்வின் திருப் பொருத்தம் பெற

“(நபியே உமது பொருளில் பந்துக்களுக்குப் பாத்தியப்பட்டதை அவர்களுக்குக் கொடு (த்துவாரு) ம். (அவ்வாறே) ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் (அவர்களுடைய பாத்தியதையைக் கொடுத்து வாரும்). எவர்கள் அல்லாஹ்வுடைய திருப் பொருத்தத்தை விரும்புகின்றார்களோ அவர்களுக்கு இதுவே மிக்க நன்றாகும். இத்தகையோர்தாம் நிச்சயமாக சித்தி பெறக் கூடியவர்கள்.” (30:38)

கூலி இரட்டிப்பாகப் பெறும் காரியம்

“(மற்ற மனிதர்களின் பொருள்களுடன் சேர்ந்து உங்கள் பொருளும் அதிகப்படுவதற்காக) வட்டிக்கு நீங்கள் கொடுக்கும் பொருள், அல்லாஹ்விடத்திலே அதிகப்படுவதில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி ஸகாத்தாக நீங்கள் ஏதும் கொடுத்தாலோ (அது அல்லாஹ்விடத்தில் அதிகப்படும்) இத்தகையோர்தான் (கூலியை) இரட்டிப்பாகப் பெறக் கூடியவர்கள்” (30:39)

அல்லாஹ்வின் அருளை அடைய வழி

“(விசுவாசிகளே) தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி, ஸக்காத்தும் கொடுத்து அவனுடைய தூதரை (முற்றிலும்) பின்பற்றி வாருங்கள். நீங்கள் (இறைவதுடைய) அருளை அடைவீர்கள்!”

செயல்களில் அழகானவர்

“(அவன்) இரகசியத்தையும், பரகசியத்தையும் நன்கறிந்தவன். (யாரையும்) மிகைத்தவன் ஞானமுடையோன்““ (64:18)

“(எவர்) அல்லாஹ்வை (முற்றிலும்) நம்புகின்றாரோ அவருக்கு அவனே (முற்றிலும்) போதுமானவன். நிச்சயமாக 3 அல்லாஹ் தன் குறிக்கோளை அடைந்தே தீருவான். (ஆயினும்) அல்லாஹ் ஒவ்வொன்றிற்கும் (ஒரு காலத்தையும்) அளவையும் நிச்சயமாக கற்பித்திருக்கின்றான். (அதன் பிரகாரமே யாவும் நடைபெறும்)” (65:3)

“எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்கிறாரோ அவரை அவருடைய பாவங்களை விட்டு விடுவித்து அவருக்கு மகத்தான கூலியையும் கொடுக்கிறான்“ (65:5)

“விசுவாசிகளே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக் கூடிய நரக நெருப்பிலிருந்து இரட்சித்துக் கொள்ளுங்கள்” (66:6)

“விசுவாசிகளே நீங்கள் கலப்பற்ற மனத்துடன் (பாவத்திலிருந்து விலகி) அல்லாஹ்வின்பால் திரும்புங்கள். உங்கள் இறைவனோ உங்கள் பாவங்களை உங்களை விட்டுப் போக்கி (மன்னித்து)ச் சுவனபதிகளிலும் உங்களைப் புகுத்திவிடுவான்.” (66:8)

“உங்களில் எவர்செயல்களில் மிக்க அழகானவர் என்பதில் உங்களைச் சோதிக்கும் பொருட்டே அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்திருக்கிறான். அவன் (யாவரையும்) மிகைத்தோன். மிக்க மன்னிப்புடையோன்.” (67:2)

பெரும் பாவிகள் யார்?

“(விசுவாசிகளே) அல்லாஹ்வை (நிராகரித்து அவனை முற்றிலும்) மறந்து விட்டவர்களைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம். ஏனென்றால் (அதன் காரணமாக) அவர்கள் தங்களையே மறக்கும்படி (அல்லாஹ்) செய்து விட்டான். இத்தகையோர் பெரும் பாவிகள்தாம்.” (59:19)

அல்லாஹ் நீதவான்களை நேசிக்கின்றான்

“(விசுவாசிகளே) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாதவர்களுக்கும் உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளிப்படுத்தாதவர்களுக்கும் நீங்கள் நன்றி செய்ய வேண்டாமென்றும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்ளக் கூடாதென்றும் அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதவான்களை நேசிப்பவனாகவே இருக்கின்றான்““ (60:08)

“விசுவாசிகளே, நீங்கள் செய்யாத காரியங்களைச் செய்ததாகவோ பிறர் செய்யுமாறோ) ஏன் கூறுகின்றீர்கள்? நீங்கள் செய்யாததை (ச் செய்ததாக) க் கூறுவது அல்லாஹ்விடத்தில் மிக்க வெறுக்கத்தக்கதாக இருக்கிறது.”(61:2,3)

துன்புறுத்தும் வேதனையிலிருந்து தப்பிக்க

“விசுவாசிகளே, ஒரு வியாபாரத்தை உங்களுக்கு அறிவிக்கவா? (அது) துன்புறுத்தும் வேதனையிலிருந்து உங்களை இரட்சித்துக் கொள்ளும். (அதாவது) அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் விசுவாசித்து, உங்களுடைய பொருள்களையும், உங்களுடைய உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுங்கள். நீங்கள் அறிவுடையோர்களானால் இதுவே உங்களுக்கு மிக்க மேலானதாக இருக்கும்”(61:10,11)

“விசுவாசிகளே ஜுமுஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வைத் தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நன்று. தொழுகை முடிவுற்றால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள். நீங்கள் சித்தியடையும் பொருட்டு அடிக்கடி அல்லாஹ்வை நினைவுகூருங்கள்” (62:9,10)

அளவையும் நிறுவையும்

“அளவில் மோசம் செய்பவர்களுக்கு கேடுதான். அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால் நிறைய அளந்து கொள்கின்றனர்” (83:1,2)

“மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது மற்றவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து (அவர்களை நஷ்டப்படுத்தி) விடுகின்றனர். (83:3)

# 2 நாள் அறபு எழுத்தணி பயிற்சி வகுப்பு - 2024

– அறபு எழுத்தணிக் கலையில் ஆர்வமுள்ள கொழும்பு மற்றும் அன்மித்த அறபுக் கல்லூரி ஆண் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்

**வளவாளர்கள்:**

- Ash Shaikh Junaid Naseer Naleemi (SLTS, BA, Dip in Edu, M.Ed)

- Al Alim S. Majeem Yousufi (India)
Lecturer Dharul Uloom Al-Hashimiyyah Arabic College> Nawalapitiya

- Al Aalim Al Faazil N.M. Silmy (Noori, Saahdhi)
Usthaz Rawlathul Jannah Arabic College (Muthur)

- Ash Shaikh Moosa Kaleem Naleemi
(SLTS, BA, Dip in Edu, M.Ed)

– பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் காலம்: 26–27, ஒக்டோபர் (சனி – ஞாயிறு)

**இடம்:**
ரத்மலானை

**சேவைக் கட்டணம்: 1000/-**

தங்குமிட வசதி செய்து தரப்பட மாட்டாது. பங்கு பற்றுவோர் தமது மத்ரசாவிலிருந்து அல்லது வீட்டில் இருந்து வந்து போக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணைந்து கொள்ள விரும்புகின்றவர்கள்
- உங்கள் பெயர்
- கல்வி கற்கும் தரம்
- கற்கும் அறபுக் கல்லூரியின் பெயர்
- உங்கள் சுய முகவரி

ஆகியவற்றை 0778852767 எனும் what's app இலக்கத்திற்கு 04/10/2024 ஆந் திகதிக்கு முன் அனுப்புமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**ஏற்பாடு**
A.B.M. **அஷ்ரப் நழீமி** (SLAS)
ஸ்தாபக தலைவர் –
இலங்கை அறபு எழுத்தணி கலைச் சங்கம் மற்றும் முன்னாள் பணிப்பாளர் – முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்ல்கள் திணைக்களம்
ARABIC CALLIGRAPHY ASSOCIATION OF SRI LANKA – ACAS




# இலங்கை புதிய ஜனாதிபதி நாட்டின் மிக பெரிய அளவிலான சவால்களை எப்படி கையாள போகிறார்?



**எஸ்.ஏ. சுஃப்யான்**
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



நான் ஒரு மந்திரவாதி அல்ல.இந்த நாட்டின் ஒரு சாதாரண குடிமகன்.ஆற்றல் இருக்கும் அதேநேரத்தில் ஆற்றாமையும் என்னிடத்தில் நிறையவே இருக்கிறது.எனவே அதனைத் தவிர்த்து என்னிடம் எந்தவொரு விசேட சக்தியும் இல்லை. அதே நேரத்தில் எனது ஆற்றலை கொண்டு திறமையானவர்களை அடையாளம் கண்டு , அவர்கள் அனைவரின் திறமைகளை ஒருங்கிணைப்பு செய்து தேச வளர்ச்சிக்கு உதவுவேன்..

ஜனநாயகம் எனக்கு வழங்கிய அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்துவேன். அதேநேரத்தில் எனக்கு வாக்களிக்காத மக்களின் நன்மதிப்பை பெறுவேன். இந்த நாட்டின் வளர்ச்சிக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு தேவை என்பதை நான் நன்கு உயர்ந்துள்ளதால் பாரபட்சம் அல்லாத உறவுகளை அனைவரோடும் நடுநிலையான முறையில் பின்பற்றுவேன் என்று இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயக்க தமது பதவியேற்பு விழாவில் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய விஷேட உரையின் சுருக்கமே இதுவாகும்..

நூற்றாண்டுகளாக நாம் கண்ட கனவு இறுதியில் இன்று நனவாகியுள்ளது. சிங்களர், தமிழர், முஸ்லிம்களின் ஒற்றுமை, புதிய யுகத்தின் தொடக்கமாக இருக்கும்" என்று இலங்கையின் புதிய அதிபராகப் பதவியேற்ற அநுர குமார திசாநாயக்க பேசியுள்ளது இதுவரை இருந்த அதிபர்களின் குரலிலிருந்து மாறுபட்டது.

கம்யூனிஸ்ட் போர்வையிலுள்ள இனவாதக் கட்சி என்று சிலரால் விமர்சிக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் அடையாளத்தை மாற்றி, தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் கதாநாயகனாக உருவாகி இலங்கையின் இடதுசாரி கொள்கை கொண்ட முதல் அதிபராக அநுர குமார திசாநாயக்க தேர்வு செய்யப்பட்டுள்ளதை இலங்கையில் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அவரது பேச்சில் அதிகம் நம்பிக்கை தென்படுகிறது. சமகால அரசியலில் இலங்கையை அவர் சிறந்த தேசமாக அதாவது சமாதானம் மற்றும் வளர்ச்சி அடைந்த தேசமாக மாற்றுவதற்கு தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்வார் என்பதை தான் சர்வதேச நாடுகள் அவரிடம் பெரிதாக எதிர்பார்க்கிறது . இந்த எதிர் பார்ப்பு அவரது வலிமை வாய்ந்த பேச்சின் ஊடாக நம்மால் உணர முடிகிறது.ஆனாலும் இந்த நீண்டதொரு பயணத்தில் அவரது செயல்பாடுகள் குறித்து காலப்போக்கில் தான் நம்மால் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும் என்பதே யதார்த்தமான நிலையாகும்

ஊழல் குறித்தான எதிர்ப்பு உலகின் பல்வேறு தேசங்களிலும் மிகப் பெரிய அளவில் ஆன சிக்கலான பரிணாம நிலையை தான் தற்போது ஏற்படுத்தி வருகிறது. இதனைத் நன்கு உணர்ந்து ஜே வி பி தனது பிரச்சாரத்தில் அதனை மிகவும் வலியுறுத்தி பிரச்சாரம் செய்து வந்தது. 2019 ம் ஆண்டு வெறும் 3.16 தசம் வாக்குகளை பெற்ற ஜேவிபி ஐந்து ஆண்டுகளில் எப்படி 42.3 மூ தசம் வாக்குகளை அவரால் பெற முடிந்தது என்பது தான் வியப்பின் உச்சகட்டம் . ஆகவேதான் ஜேவிபி மற்றும் அதன் தலைவர் அனுரா குமார திசாநாயக்கவின் வலிமை வாய்ந்த பிரச்சார யுக்தி இலங்கை மக்களிடையே மிகப் பெரிய அளவில் ஆன தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

இலங்கையில் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சிகரமான 'மக்கள் போராட்ட'த்துக்குப் பிறகு நாட்டைக் காப்பாற்ற வந்த ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்கு வெறும் இரண்டரை வருடங்களே ஆயுள் இருந்தது. அக்குறுகியகாலத்துக்குள் அவர் நாட்டு மக்களின் நலனுக்காக எதையும் செய்யாதது, அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தாமல் புறம் தள்ள மக்களை நிர்ப்பந்தித்துள்ளது என்பதை இந்தத்தேர்தல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பெருமளவு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய அதிபராக அநுர குமார திசாநாயக்கவிற்கு இப்போது பெரும் பொறுப்பு இருக்கிறது. இலங்கையில் பொதுமக்கள் எதிர்கொண்டிருக்கும் அனைத்து நெருக்கடிகளையும் முடிவுக்குக் கொண்டு வருவார் என்ற முழுமையான நம்பிக்கையை மக்கள் இன்று அவர் மீது வைத்திருக்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுர குமார திசாநாயக்கவால் 2019-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதும், இலங்கை அரசியலில் இதுவரை மூன்றாவது அரசியல் கட்சியாக இருந்து வந்ததுமான தேசிய மக்கள் சக்தி- யேவழையெட"நழிடந"ள "ழறநச (ழே) என்பது இலங்கையின் ஓர் இடதுசாரி அரசியல் கூட்டணி ஆகும். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வைத் துரத்தியடித்த மக்கள் போராட்டத்திற்கு ஆரம்பத்தில் அநுர குமார திசாநாயக்க அந்தளவு ஆதரவு அளிக்கவில்லை என்றாலும் போராட்டம் படிப்படியாக உக்கிரமடைந்தபோது அவரது கட்சியின் ஆதரவு அதிகமாகி போராட்டத்துக்கு மேலும் வலு சேர்த்தது. தொடர்ந்து 'மக்கள் போராட்டம்' கோத்தாபய ராஜபக்ஷவை நாட்டிலிருந்து துரத்தியடித்ததோடு அதற்கான பெரும்புகழ் அநுர குமார திசாநாயக்கவின் கட்சியை வந்தடைந்தது.

மக்கள் போராட்டம்' என்ற ஒன்று மாத்திரம் அன்று நிகழ்ந்திருக்காவிட்டால் இலங்கையின் முக்கிய அரசியல் சக்திகளில் ஒருவராக அநுர குமார திசாநாயக்கவால் மாறியிருக்க வாய்ப்பில்லை. காரணம், அதுவரையில் பாராளுமன்றத்தில் குறைந்தளவு உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாகத்தான் அவரது கட்சி இருந்து வந்தது. என்றாலும், மக்கள் போராட்டத்துக்குப் பிறகான கடந்த இரண்டரை வருட காலத்துக்குள் இலங்கை அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மக்கள் இன்று அவரை நம்பித் தேர்ந்தெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்களுக்கு தமது வாழ்க்கையைச் சீரமைத்துக்கொள்ள நம்பகமான, பொறுப்பான, ஊழலற்ற கட்சியும், ஜனாதிபதியும் தேவையாக இருக்கிறது.

புதிய ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதியாக ஊழல் எதிர்ப்பு என்பது உள்ளது. அவரோடு போட்டியிட்டவர்கள், தாம் ஆட்சியிலிருந்தபோதே ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும், ஊழல்வாதிகளைத் தமது கட்சியில் வைத்திருந்ததும் இந்த தேர்தலில் அவர்களுக்கே கேடாக அமைந்தது.

புதிய ஜனாதிபதியிடம் திடமான உறுதி இருந்தால் ஊழலைத் தடுத்து நிறுத்துவதில் உறுதியாக இருப்பார் என்று நம்பலாம். என்றாலும், இலங்கையின் பொருளாதாரச் சீர்கேட்டைச் சரியான திசையில் கொண்டு வருவது அந்தளவு எளிதான விடயமல்ல. அதற்குரிய பொருளாதார நோக்கும், திறமையும் அதில் பெரும்பங்காற்றும். ஆகவே, புதிய ஜனாதிபதி அதில்தான் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

இதுவரையில் இலங்கையில் ஊழலற்ற அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல ஆட்சியிலிருந்த எந்தக்கட்சியாலும் முடியவில்லை. எனவேதான் இந்த தேர்தலில் இதுவரை ஆட்சியமைக்காத ஒரு புதிய இடதுசாரிக் கட்சியிடம் தமது நாட்டை ஒப்படைத்திருக்கிறார்கள் இலங்கை மக்கள். ஜனநாயக ஆட்சியில் ஒரு இடதுசாரிக் கூட்டணியிடம் தமது நாட்டை ஒப்படைக்க மக்களுக்குப் பூரண உரிமையுள்ளது.

நாட்டில் ஊழலை முடிவுக்குக் கொண்டு வரவும், வளர்ச்சிப் பாதையில் நாட்டைக்கொண்டு செல்லவும் ஒரு புதிய கட்சி, ஒரு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது நல்லதுதான். குறைந்தபட்சம் அவர்கள் ஆட்சியமைத்ததும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்படுவார்கள். பழையவர்களுக்கோ மக்களை ஏமாற்றத் தெரிந்திருந்தது. புதியவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் பதவியேற்றதுமே அந்த ஏமாற்று வித்தைகளைச் செய்யத் துணியமாட்டார். தான் ஒழுங்காக ஆட்சி செய்யவில்லையென்றால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நடந்ததுதான் தனக்கும் நடக்கும் என்பதை அவர் நன்கு அறிந்திருப்பார்.

இந்தியாவின் பெரும்பாலான ஊடகங்கள் இலங்கை தேர்தல் முடிவுகள் குறித்து தெளிவான விவாதங்களை முன்னெடுத்துச் சென்றது மிகவும் முக்கியமான காரணியாக இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்திய ஆட்சியாளர்கள் இலங்கை மற்றும் அதன் உள்நாட்டு அரசியல் போக்குகளை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்து செயல்பட வேண்டிய அளவிலான மிக முக்கியமான காரணம், சர்வதேச நாடுகளின் போக்குகளே இதற்கு காரணமாக அமைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மக்களிடையே இந்தியா, சீனா மற்றும் அமெரிக்க அரசுகளின் நீண்ட கால தாக்கம் அங்கு இருப்பதை நாம் புறந்தள்ளி விட கூடியதாக இல்லை. மாறாக இலங்கை மக்களிடையே இலங்கை தனித்த நிலையில் எல்லா நிலைகளிலும் வளர்ந்து சர்வதேச நாடுகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதே அவர்களின் அபிலாஷையாக உள்ளது . இலங்கை மக்கள் சீரற்ற, ஊழல் அரசியலை புறந்தள்ளி விட எண்ணினார்கள். அதில் வெற்றி பெற்றதை நாம் கவனத்தில்

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...

## இலங்கை...
(7ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கொள்ள வேண்டும் .

குறிப்பாக இலங்கையில் மகிந்த ராஜபக்சவின் குடும்ப அரசியல் கலாச்சாரம் ஏறக்குறைய முடிவுக்கு வந்து விட்டதாக அதன் தேர்தல் முடிவுகள் ஊடாக நம்மால் அறிந்து கொள்ள கூடியதாக உள்ளது . ஏனெனில் நமல் இராஜ பக்ஷ 3, 42781 வாக்குகளைக் மற்றுமே அவரால் பெற முடிந்தது. அதாவது சதவீத கணக்கில் இது வெறும் 2.57மூ மட்டுமே என்பதே உண்மையாகும். இந்த தேர்தல் சொல்லும் செய்தி என்னவென்றால் இனி இலங்கை அரசியலில் ராஜ பகாஷ ரூ உழ ஏதும் இல்லை என்பதே அதுவாகும். ராஜ பக்ஷ குடும்பம் இலங்கை அரசியலில் முழுமையாக ஒதுக்கப்பட்டு விட்டது என்பது உறுதியான ஒன்றாகவே உள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இந்தியாவின் வெளிவிவகார துறை இலங்கை விவகாரத்தில் அதிக அக்கறை எடுத்து கொள்ள மிக முக்கியமான காரணம் புவிசார் அரசியலில் சீனா வின் முழுமையான ஆதிக்கத்தை இலங்கையில் இருந்து முழுமையாக நீக்கி விட வேண்டும் என்பதேயாகும். ஆசிய பிராந்தியத்தில் தன்னை சர்வ வல்லமை கொண்ட தேசமாக அதுவும் பொருளாதார வல்லமை கொண்ட சக்திவாய்ந்த தேசமாக சீனா மாறி வருவதை இந்தியா மட்டுமின்றி அமெரிக்காவும் எந்த நிலையிலும் விரும்பவில்லை என்பதே உண்மையாகும். இலங்கை இந்தியாவில் கடலோர தேசமாகும். இலங்கை மட்டுமே இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய, பண்பாடு ரீதியான ஒரு தேசமாக இருக்கும் நிலையில் சமீபத்திய நாட்களில் சீனா இலங்கையை முழுமையாக தன் வசப்படுத்தி கொள்ள முயலுவது இலங்கையின் இறையாண்மை தன்மைக்கு ஊறு விளைவிப்பதாகவே அமையும் என்பதை ஏனோ இலங்கை அரசியல் தலைவர்கள் முழுமையாக மறந்து போய் விட்டது அந்த தேசத்திற்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இந்த நிலையில் பதவியேற்ற இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்தியா, சீனா இடையேயான புவிசார் அரசியல் மோதலில் இலங்கை சிக்கி துண்டாடப்படுவதையோ சிதைக்கப்படுவதையோ நாங்கள் விரும்பவில்லை இலங்கைக்கு என சுதந்திரமான நடுநிலையான வெளியுறவுக் கொள்கையைத்தான் விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா- சீனா இடையேயான புவிசார் அரசியல் மோதலில் இலங்கை ஒரு பகுதியாக மாற மாட்டோம். இலங்கை அரசாங்கமானது எந்த தரப்புடனும் இணைந்து கொள்ளாது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் சிக்கி துண்டாடப்படுவதற்கு இலங்கை விரும்பவும் இல்லை.

சீனாவும் இந்தியாவும் மதிப்பு மிக்க நணபர்கள், எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாங்கள் அவர்கள் நெருங்கிய நட்பு சக்திகளாக மாறுவதை விரும்புகின்றோம்.

ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளுடனும் சிறந்த உறவை பேண விரும்புகின்றோம் . அதிகரிக்கும் பிராந்திய பதற்றங்களிடையே இலங்கையின் இறைமையை பாதுகாப்பதற்கு இந்த நடுநிலை வெளிவிவகார கொள்கை அவசியம் என்று அவர் தெளிவு படுத்தி இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இதற்கிடையில் 2023ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த உலகளாவிய முதலீடான 9.3 பில்லியன் டாலரில் அதானி துறைமுகமும் அடங்கும். ”கொழும்புவில் உள்ள ஆழ்கடல் மேற்கு கன்டெய்னர் டெர்மினல் (னநநிறயவநச றுநளவ ஊழவெயரைநெச வநசஅையெட), ஆசியாவிலேயே அமெரிக்க அரசு நிறுவனத்தின் மிகப்பெரிய உள்கட்டமைப்பு முதலீடு ஆகும். இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இரு நாடுகளுக்கும் முக்கிய கூட்டாளியான இந்தியா உட்பட அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்புக்கு ஊக்கமளிக்கும்” என அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், ’கொழும்புத் துறைமுகம், கடந்த இரண்டு ஆண்டுகளாக அதன் 90 சதவீதத்துக்கும் அதிகமான பயன்பாட்டில் இயங்கி வருவதாகவும், எனவே, அதற்கு புதிய திறன் தேவை’ என்றும் அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 442 மில்லியன் டாலர் மதிப்பீட்டில் மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் காற்றாலைகளை அமைக்க, இந்தியாவைச் சேர்ந்த அதானி க்ரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு இலங்கையின் முதலீட்டு வாரியம் அனுமதி அளித்தது. ஆனால், சுற்றுச்சூழல் பிரச்னைகள், இந்த காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரம் கூடுதல் விலைக்கு இலங்கை மின்வாரியத்திற்கு விற்கப்படும் என்ற கவலைகளால் ஆரம்பத்திலிருந்தே இந்தத் திட்டம் எதிர்ப்பைச் சந்தித்து வருகிறது.

தேர்தல் பிரசாரத்தின்போது அதானியின் காற்றாலை மின்திட்டத்திற்கு எதிராகப் பேசியதை வைத்தே, அவர் இந்தியாவுக்கு எதிரான அணுகுமுறையைக் கொண்டிருக்கலாம் என குறிப்பிடப்படுகிறது. அது சரியான பார்வையல்ல என்கிறார்கள் தற்போதைய அவரது பேச்சை துல்லியமான முறையில் கவனித்த இந்தியா மற்றும் சர்வதேச அரசியல் முகாமையாளர்கள் என்பதை நாம் இங்கே சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

பொருத்தவரை, அநுர குமார திஸ ாநாயக்கவை கண்டுகொள்ளாமல் எப்போதும் இருந்து விடவில்லை. இந்த ஆண்டு 2024 ம் ஆண்டு பிப்ரவரியில் அவர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார். முக்கியமான தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார். பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று அங்கேயும் பலரை சந்தித்தார். பொதுவாக இந்திய எதிர்ப்பு மனநிலை கொண்ட கட்சியாக அறியப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவோடு தொடர்புகொண்டு இந்தியா செயல்பட்டது இதுவே முதல் முறையாகவும் இருந்தது” என்பதை இந்திய பத்ரிகைகள் தெளிவாக கோடிட்டுக் காட்டி இருந்தது.

அதே சமயம் ஜனதா விமுக்தி பெரமுனவைப் பொருத்தவரை, அது பழைய ஜே.வி.பி. இல்லை. அது ஒரு மையவாதக் கட்சியாக மாறிவிட்டது என்று இந்திய தேசிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன ஆனாலும், ரணில் விக்ரமசிங்கவைப் போல முழுமையான இந்தியச் சாய்வு கொண்டவராக அவர் இருப்பார் என சொல்ல முடியாது என்று அந்த ஊடகம் தெளிவாக தெரிவித்துள்ளது.

இலங்கை இன்னமும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது என்பதை புதிய அதிபர் அநுர குமார திசாநாயக்க நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் இது தற்போது அவருக்கு முன்னால் இருக்கும் மிகப் பெரிய அளவில் ஆன சவால் என்பதே யதார்த்தமான நிலையாகும். இந்த கடினமான சிக்கலை தீர்க்க அவர் நீண்ட கால போராட்டதை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் இலங்கையின் மொத்த கடன் அளவு 84 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு சென்று விட்டது. 2022 ம் ஆண்டு இலங்கை மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார நெருக்கடியால் சிக்குண்ட நிலையில் இருந்த மொத்த கடன் தொகை அளவிலான 56 பில்லியன் அமெரிக்க டாலர் கடன் தொகையை விட பல மடங்கு அதிகம் என்பது மிகவும் கலவையான செய்தியாக புதிய அதிபருக்கு இருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க யாருக்க வாய்ப்பே இல்லை. இதற்கு மூல காரணமாக முந்தைய இலங்கை ஆட்சியாளர்கள் வகுத்த சுயநலம் சார்ந்த கொள்ளை முடிவுகள் தான் என்பது புதிய அதிபர் அநுர குமார திசாநாயக்க அரசுக்கு மிகவும் கசப்பான செய்தியாகும்.

அநுர குமார திசாநாயக்க தேர்தல் பிரச்சாரத்தில், கூ2.9 பில்லியன் ஐஆகு பிணை எடுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக சுமத்தப்பட்ட சிக்கன நடவடிக்கைகளின் கீழ், பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்றத்தை வழங்குவதாக தேர்தல் பரப்புரையின் போது அவர் உறுதியளித்தார். தற்போதுள்ள நலத்திட்டங்களை விரிவுபடுத்தவும், போராடும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் உறுதியளித்துள்ளார்.

எவ்வாறாயினும், வரிகளைக் குறைப்பதற்கும் பிணை எடுப்பு ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதற்கும் அவர் முன்வைத்துள்ள திட்டங்கள் முதலீட்டாளர்கள் மத்தியில் கவலையை எழுப்பியுள்ளன. இலங்கையின் முக்கியமான கூ25 பில்லியன் கடன் மறுசீரமைப்பில் தாமதம் ஏற்படக்கூடும் என்று வல்லுநர்கள் கணிக்கின்றனர்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை மீளமைத்தல், சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தைகளை உறுதிப்படுத்துதல், முதலீட்டை ஈர்த்தல் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 25மூ இலங்கையின் 22 மில்லியன் குடிமக்களுக்கு வறுமையைப் போக்குதல் போன்ற பணிகளில் முதலில் கவனம் செலுத்த அனுரா குமார திசநாயகே திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சவாலை எதிர்கொள்ள அவரது போராட்டம் நீண்ட கால பயணத்தில் ஆன ஒன்று என்பதை அவர் நன்கு உணர்ந்து தான் இருப்பார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கை சர்வதேச அளவில் மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார ஸ்திரத்தன்மை அடைந்து இருக்க வேண்டும்.ஆனால் , பல தசாப்தங்களாக இலங்கை உள்நாட்டுப் போரின் காரணமாக மிகுந்த பொருளாதார நெருக்கடியை சந்தித்தது . அதேநேரத்தில் சுயநலம் சார்ந்த அரசியல்வாதிகள் தங்கள் நலன் சார்ந்த கொள்கைகளை திட்டமிட்டு வகுத்த காரணத்தால் தான் இலங்கை இன்று இந்த அளவிற்கு ஆன பொருளாதார நெருக்கடியால் சிக்கி தவிக்கும் நிலை காணப்படுகிறது. செழிப்பான ஒரு தேசம் பொருளாதார ஸ்திரத்தன்மை அற்ற நிலையில் சிக்கி தவிப்பதை எந்த ஒரு அதிபரும் மனதளவில் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முன் வரமாட்டார்கள். அதேநேரத்தில் இலங்கையில் இன பிரச்சினைகள் பாரிய அளவிலான தாக்கத்தை கடந்த காலங்களில் ஏற்படுத்திய நிலையில் தற்போது பெரும்பான்மை வாதம் தலைதூ க்கி விடமால் இருக்கும் வகையில் கடும் போககுவாத சக்திகளையும் இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயக்க கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளில் இது போன்ற பெரும்பான்மை வாத வலதுசாரி சித்தாந்தம் தலைதூ க்கி இருப்பது ஆபத்தான ஒரு அடையாளம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அவ்வகையில் இலங்கையின் புதிய அதிபர் அநுர குமார திசாநாயக்கவின் வலிமை மற்றும் ஞான புத்தி கூர்மை சார்ந்த அரசியல் எப்படி அமையப் போகிறது என்பதை நாம் கவனிக்க கூடியதாக இருக்கிறது. அதற்கான பதில் காலத்தின் கைகளில் தான் உள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும்... அதுவரையில் இலங்கையின் பொது சமூகம் பொறுமையாக காத்து இருக்க வேண்டும் என்பதை மட்டும் இந்த தருணத்தில் நம்மால் சுட்டி காட்ட முடியும் என்பதே உண்மையாகும்..!

தேர்தல் விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க வேண்டுமாயின்
தொடர்புகளுக்கு:
070 239 7210



# ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் பள்ளிவாசல் பல்துறை கட்டிடம் திறப்பு

(பீ.எம் முக்தார்)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி, மஜ்மா கிராமத்தில் பள்ளிவாசலுடன் கூடிய பல்துறை கட்டிடம் ஒன்று ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கொரோனா எனும் கொடிய வைரஸ் உலகையே உலுக்கிக் கலக்கியதை நாம் அறிவோம். கொவிட் - 19 என பொதுவாக அழைக்கப்படும் இந்த ஆட்கொல்லி வைரஸால் உலகளவில் பல ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகின. இதனால் உலகின் இயக்கமே ஸ்தம்பித்துப் போனது. இதற்கு எமது இலங்கை தீவும் விதிவிலக்கல்ல. ஆனால் ஒரு வித்தியாசம்.

கொரோனா தொற்றினால் மரணமானவர்களின் பூதவுடல்கள் உலக நாடுகள் அனைத்தும் ஒரு முகப்பட்டு அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப அடக்கமோ அல்லது தகனமோ செய்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பும் இதனையே அங்கீகரித்திருந்தது.

ஆனால், அப்போதிருந்த அரசும் சில அதிகாரிகளும் இதற்கு மறுதலையாக கட்டாயமாக தகனம் செய்ய வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்பாடானது இஸ்லாமிய சமய அனுஷ்டானத்திற்கு பலத்த அடியாக இருந்தது.

இந்நிலையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முஸ்லிம்களதும், முஸ்லிம் நலன் விரும்பிகளதும் தகனத்திற்கெதிரான பலத்த எதிர்ப்புகளால் நிலைமை மாறி கொரோனா தொற்றினால் மரணமாகும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நிபந்தனைகளுடன் நல்லடக்கம் செய்வதற்கு அரசு அடிபணிந்தது. அந்த நிபந்தனையே நிலத்தடி நீர் குறிப்பிட்ட ஆழத்திற்குக் கீழ் உள்ள பகுதியான கிழக்கிலங்கையின் ஓட்டமாவடி நகர் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு இன்னும் பல பகுதிகள் காணப்பட்ட போதிலும் முஸ்லிம் அல்லாத பிற சமூகத்தவர்கள் பின் வாங்கும் நிலையில் முழுக்க முழுக்க முஸ்லிம் பிரதேசமே கைகொடுத்தது. அதுவே ஓட்டமாவடியிலுள்ள மஜ்மா கிராமமாகும்.

சுமார் 17 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மையவாடிக்குரிய காணியும் கூட குறிப்பிட்ட பிரதேச மக்களாலேயே அன்பளிப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க செயற்பாடாகும். மஜ்மா மையவாடியின் தோற்றம், ஏற்றம், இப்போது நிர்மாணம் வெறும் பள்ளிவாசல், பல்துறை கட்டட தொகுதியின் நிர்மாணம் என்பன இலங்கை வரலாற்றின் ஒரு மைல் கல்லாக நிச்சயம் பதியப்படும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றம், வளர்ச்சி வரலாற்றோடு மஜ்மா நகரும் வருங்கால சந்ததியினருக்கு தலை நிமிர்ந்த வரலாற்று சான்றுகளை கூறிக் கொண்டே இருக்கும்.

### கொரோனா பூதவுடல்களை சுமக்கும் மஜ்மா மையவாடி

மஜ்மா நகர் ஜன சஞ்சாரமற்ற ஒரு சாதாரண வனப்பகுதியாகும். சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்பகுதி மையவாடியாக்கப்பட்டாலும் ஒரு பாரிய நகரமாக பரிணமிக்க போகிறது என்பதை எண்ணும் போது, துரதிஷ்ட நிகழ்வுகள் அதிஷ்டம் தரும் அரிய நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் சம்பவங்களையே எமக்கு உணர்த்துகின்றதைக் காண முடிகிறது. நாடு கடத்தப்பட்ட ஒராபிபாஷா இலங்கை முஸ்லிம்களின் கல்விக் கண்களை திறந்த நிகழ்வு போன்றதாகும்.

17 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 3634 பூதவுடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 2956 ஜனாஸாக்கள் முஸ்லிம்களுடையதாகும்.

### மஜ்மா மையவாடி பள்ளியின் தோற்றமும் பின்னணியும்

2,956 முஸ்லிம் ஜனாஸாக்களில் பேருவளை சீனங்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா ஸவாஹிரின் ஜனாஸாவும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஜனாஸா அடக்கஸ்தலத்திற்கு கிரமமாக இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இரீபதுல் ஹைறாவின் அடக்கஸ்தலத்திற்கு 3330 ஆம் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. இவர், ஜனாஸா எரிப்பின் பின்னர் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட இறுதி கால கட்டமான மஜ்மா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவரின் ஞாபகார்த்தமாகவே அவரது கணவர் ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளினால் "பைதுல் ஹைறாத்" என்ற பெயரில் அழகிய தோற்றத்துடன் சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்ட பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்தேவைக் கட்டிடங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 140-40 சதுர அடி நிலப்பரப்பில் இக்கட்டிடம் அமையப்பெற்றுள்ளது. இக்கட்டிடமே இன்று (2024-10-01) அஸர் தொழுகையைத் தொடர்ந்து திறந்து வைக்கப்படுகிறது.

இம்மையவாடியைத் தரிசிக்க வரும் சகல இன, மத மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலே இக்கட்டிடம் திறந்து விடப்படுகிறது.

பள்ளிவாயல் திறப்பு விழாவினை அடுத்து கொரோனாவினால் மரணித்தவர்களுக்காக கத்தமுல் குர்ஆன் தமாம் யாஸீன் ஸ/றா ஓதுதல் மற்றும் துஆ பிரார்த்தனையும் இடம்பெறும்.

நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க். அர்கம் நூர் ஆமித், பொருளாளர் கலாநிதி. அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி), முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் மற்றும் அஷ்ஷெய்க். முனீர் முளப்பர் (நளீமி) உட்பட பிரதேச அரசியல்வாதிகள் ஓட்டமாவடி மற்றும் வாளைச்சேனை உட்பட அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிவாயல்கள் சம்மேளன நிர்வாகிகள், கோரலைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் ஊழியர்கள் ஊர்த் தலைவர்கள், மட்டக்களப்பு மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை முக்கியஸ்தர்கள், சீனங்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் அல்ஹாஜ் ஏ.எச். எம் முக்தார் உட்பட உறுப்பினர்கள், ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியாரின் குடும்ப அங்கத்தவர்களும், உலமாக்கள், புத்திஜீவிகள் பலரும் கலந்து கொள்வர்.

### மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா

பேருவளை சீனங்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்க கல் வர்த்தகர் மர்ஹூம் அப்துல் வதூத் மர்ஹூமா ஜெமீலா உம்மா தம்பதியின் புதல்வியாக 1961-12-13 ஆம் திகதி மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறா பிறந்தார்.

1977-11-05 ஆம் திகதி பிரபல மாணிக்க கல் வர்த்தகரான மர்ஹூம் அல்-ஹாஜ் அஹமட் ஸரூக் ஹாஜியானி மர்ஹூமா ஹக்கீகத் உம்மா தம்மதியின் புதல்வரான அல்-ஹாஜ் ஏ.இஸட்.எம் ஸவாஹிரை திருமணம் செய்தார்.

பாத்திமா ஸுமையா, பாத்திமா றிஸ்னா, ரஹ்மத் ஹாமிதா, முஹம்மத் அஹ்ஸர், முஹம்மத் ரிகாஸ் ஆகியோர் இவரின் அன்புபிள்ளைகளாவர். மர்ஹூமா இரீபதுல் ஹைறாவுக்கு 15 பேரப் பிள்ளைகளும் உள்ளனர். இவர் தக்வாவும், இஹ்லாஸும் உள்ள ஓர் அடக்கமான இஸ்லாமிய பெண்ணாக வாழ்ந்துள்ளார். நாட்டுக்கும், சமூகத்திற்கும், ஊருக்கும் நல்ல பல சேவைகளை செய்யக் கூடிய பிள்ளைகளாக தமது பிள்ளைகளை வளர்த்துள்ளார். தனது கணவர், பிள்ளைகள் சமூக விமோசனத்திற்காக வாரி வாரி வழங்குவதற்கு உற்சாகமூட்டிய ஒரு சீதேவியாவார்.

சிரித்த முகத்துடன் வீடு வந்தோரை வரவேற்று விருந்துபசாரம் வழங்குவதில் முன்னிலையில் இருந்தார். குடும்ப உறவினைப் பேணி நடந்தார். செல்வம் நிறைந்திருந்தாலும் சாதாரண பெண்ணாக வாழ்ந்து முன்மாதிரி காட்டினார்.

60 வருட காலம் வாழ்ந்நா 2022-01-10 ஆம் திகதி கொழும்பில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியொன்றில் மாலை 7:40 மணிகாகு இறையடி சேர்ந்தார். இவரது ஜனாஸா 2022-01-11 ஆம் திகதி ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

யா அல்லாஹ்! இவர் செய்த அத்தனை நற்காரியங்கள், நல்ல அமல்களை அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்குவாயாக, ஆமீன்.

### கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களின் பணி

ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் இரவு பகல் பாராது சேவையாற்றிய கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களை கௌரவித்து சீனங்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் குடும்பத்தரால் ஞாபகார்த்த சின்னமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவில் மரணித்தவர்களை அடக்கம் செய்த இந்த மஜ்மா நகர் மையவாடி பின்னர் காடுகள் வளர்ந்து காணப்பட்டது. அதனையும் கூட ஸவாஹிர் ஹாஜியார் குடும்பத்தினர் தமது சொந்த செலவில் சுத்தம் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொரோனா ஜனாஸாக்களுக்காக பிரார்த்தனை செய்ய குடும்ப அங்கத்தவர்கள் தினந்தோறும் தூர இடங்களிலிருந்து வருகின்றனர். அதே போல் பிற, மத சகோதரர்களும் சமூகமளிக்கின்றனர். இவர்களுக்கு ஓய்வெடுக்க கூடிய வசதி வாய்ப்புகள் இங்கு போதியளவு இருக்கவில்லை.

இதை அறிந்த ஸவாஹிர் ஹாஜியார் அவரது குடும்பத்தினர் பள்ளிவாசலையும், பல்துறை கட்டிட வசதியையும் அங்கு சம்பூரண நிலையில் அமைத்துள்ளனர். இவர்களின் இந்த உயரிய பணியை பாராட்ட வேண்டும். இவர்களுக்கு நன்றி கூறி துஆவும் செய்ய வேண்டும்.

பள்ளிவாசலும், பல்துறை கட்டிடமும், மலசலகூட வசதியும் அமைக்கப்பட்டதன் மூலம் மஜ்மா நகர் மையவாடியானது மேலும் புதுப் பொலிவு பெற்றுள்ளன.

இப் பணியை சிறப்பாக முன்னெடுக்க ஊர் மக்கள், கிழக்கின் அரசியல்வாதிகள், கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் உட்பட உறுப்பினர்கள், செயலாளர் உட்பட ஊழியர்கள், அரச அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பாதுகாப்பு பிரிவினர், உலமாக்கள், புத்திஜீவிகள் வழங்கிய ஒத்துழைப்பு மறக்க முடியாது.

## ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிமின் வாழ்த்துச் செய்தி



ஓட்டமாவாடி மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள பேருவளை சீனங்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறாவின் ஞாபகார்த்தமாக அவரின் கணவர் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவர் பிள்ளைகளால் குறித்த மையவாடி காணியில் பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்துறை கட்டிடமும் நிர்மாணித்து இன்று மக்கள் பாவனைக்காக அன்பளிப்பு செய்யப்படுகிறது. இது குறித்து நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி - அஷ் ஷாதுலி) விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மர்ஹூமா ஹாஜியாணி இரீபதுல் ஹைறா தனது வாழ்வில் தர்மங்கள் செய்வதில் அர்ப்பணிப்போடு செயலாற்றியது போன்று தம் பிள்ளைகளையும் நற்பணி செய்வதில் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வளர்த்துள்ளார். இன்று அவரது கணவர் பிள்ளைகள் குடும்பத்தால் இந்த பள்ளிவாசல் உள்ளிட்ட கட்டிடம் அன்பளிப்பு செய்யப்படுகிறது.

மரணித்த தனது தாய்க்காக தானதர்மங்கள் செய்வதற்கு ஸஹாபாக்களை இறைத்தூதர் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் தூண்டியும் ஆசை காட்டியும் உள்ளார்கள்.

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைறாவின் கணவர் புதல்வர்கள் அன்னாரின் பெயரில் அன்பளிப்பாக செய்யக்கூடிய இந்த ஸதகதுல் ஜாரியாவை அல்லாஹ் ஏற்று அவர்களுடைய அடக்கஸ்தளத்தை சுவர்க்கத்தின் பூஞ்சோலையாகவும் ஒளிமயமாகவும் ஆக்கி அருள்புரிவதோடு அவரது கணவர் பிள்ளைகள் குடும்பத்தார் அனைவரையும் நற்பாக்கியம் பெற்றவர்களாகவும் சுவனத்தின் மாளிகையில் சொந்தக்காரர்களாகவும் ஆக்க அருள்புரிவானாக!

## சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ஏ.எச்.ஏ. முக்தார் வாழ்த்து!



கோவிட்-19 எனும் கொரோனா தொற்றுக்கு இலக்காகி 2022 ஆம் வருடம் 10ஆம் தேதி மரணமான சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியாணி மர்ஹூமா இர்பதுல் ஹைறாவின் ஜனாஸா மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது பெயரால் குறித்த மையவாடி கானியில் பள்ளிவாசலும் பல்துறை கட்டிடமும் 01.10.2024 மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படுவதையிட்டு அல்லாஹ்வை புகழ்வதோடு மேற்படி மேலான தர்மத்தை செய்துள்ள மர்ஹூமா இருப்பதுள் ஹைறாவின் கணவர் ஸவாஹிர் ஹாஜியாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிக்கிணங்க நாளை மறுமையில் சுவர்க்கலோகத்தில் அழகிய மாளிகை கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன். இந்தக் குடும்பம் மேற்கொண்டுள்ள இந்த காரியத்தால் சீனன்கோட்டை பிரதேசம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது. மக்கள் குடியிருப்புகள் இல்லாத மஜ்மா மையவாடி பிரதேசம் எதிர்காலத்தில் வீடுகளும் கடைகளும் நிறைந்த பெரிய நகராக பொலிவு பெறும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இலங்கை வரலாற்றிலும், குறிப்பாக முஸ்லிம்களின் வரலாற்றிலும் சிறப்பிடம் பெற போகிறது. இதிலும் பேருவளை சீனங்கோட்டையின் பெயரும் புகழும் மேலும் மெருகேற்றப்படுவதை நினைக்கும் போது மகிழ்ச்சி பிறவாக்கம் மேலும் ஊற்றடுக்கவே செய்கிறது.மர்ஹூமா இரீபதுல் ஹைறா, வறிய மக்களோடு நல்ல நேசம் வைத்திருந்ததை எமது பிரதேசத்தில் எல்லோரும் அறிவர். வசதி குறைந்த மக்களுக்கும் இன்முகத்துடன் உதவியுள்ளார்.

## ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியாரின் செய்தி



பேருவளை சீனன்கோட்டையில் பிறந்த எனது மனைவி இரீபதுல் ஹைறா, கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் கிழக்கு மாகாணத்தின் மஜ்மா நகர மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டமை ஒருபுறம் மனதை உருத்தச் செய்தாலும், மறுபுறம் எரிக்கபப்டுவது தவிர்க்கப்பட்டதற்கு, அல்லாஹ்வுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எவரும் என்னைப்பார்த்து இருக்காத வனப்பகுதியொன்றில் பள்ளிவாசல் ஒன்று நிர்மாணம் பெறக்கிடைத்தமையையிட்டும் மேலும் மகிழ்ச்சியடைகிறேன். இவற்றுக்கெல்லாம் வழிவகுத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் - அல்ஹம்துலில்லாஹ் !! என்று தனது ஆதங்கத்தை மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் கணவர் ஸவாஹிர் ஹாஜியார் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்று மனைவியின் மரணம் மஜ்மா நகரில் நல்லாடக்கம் போன்ற காரணத்தினால் மனக்குழப்பத்தில் இருந்த எனக்கு மனைவியின் பெயரால் அங்கு பைத்துல் ஹைறாத் நிர்மாணம் பெற்று திறந்து வைக்கப்படுவதால் மகிழ்ச்சிப் பிரவாக்கம் என்னுள் மேலோங்கி நிற்கிறது, எனது மனைவியின் நற்பண்பு, நற்பணிகளால் அவர் அப்போதே, அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராக விளங்கியுள்ளார். இப்போது அந்த நெருக்கம் மேலும் மேலோங்கச் செய்யும் எமது முயற்சிகளை அல்லாஹ் அங்கீகரிக்கப் பிராத்திக்கிறேன்!







# கட்டுகலை பள்ளிவாசலில் பிரதமருக்கு குதுகல வரவேற்பு



(ரஷீத் எம். றியாழ்)

புதிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று (28) கண்டி கட்டுகலை ஜும்மா மஸ்ஜிதுக்கு விஜயம் செய்தார்.

மஸ்ஜிதில் இடம் பெற்ற விசேட துஆ பிரார்த்தனை நிகழ்ச்சிகளிலும் இவர் கலந்து கொண்டார்.

கண்டியிலும் கண்டியை அண்மித்த இடங்களையும் சேர்ந்த உலமாக்கள் சமூக நல இயக்கப் பிரமுகர்கள் கண்டி கட்டுகலை வை.எம்.எம்.ஏ பிரமுகர்கள், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க பிரமுகர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள் வர்த்தகர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

மஸ்ஜித் நிர்வாக சபை தலைவர் அப்சல் மரிக்கார் வரவேற்புரை நிகழ்த்த மௌலவி எம். இர்ஷாத் துஆ பிரார்த்தனை நடத்தினார்.

கண்டி மஸ்ஜித் சம்மேளனத் தலைவர் கே. டி சித்தீக் உட்பட உலமா சபை பிரமுகர்கள் பலரும் இங்கு கலந்து கொண்டனர்.

# பெட்ரோல் விலை அதிரடியாக குறைப்பு

(ஐ. ஏ. காதிர் கான் )



இன்று (01) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அதன் எரிபொருட்களின் விலைகளைத் திருத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்தின் பிரகாரம், இந்த எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, 332 ரூபாவாகக் காணப்பட்ட 92 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 21 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 311 ரூபாவாகும் என, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, டீசல் லீற்றரின் விலை 24 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி இரத்ததான நிகழ்வு



(எம்.பஹ்த் ஜுனைட்)

அக்டோபர் 01 முதியோர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி முதியோர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாம் நேற்று (29) முதியோர் இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் மனிதாபிமான இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் ஏராளமான இளைஞர்கள் யுவதிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர்.

காத்தான்குடி தள வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இந் நிகழ்வில் இளைஞர் வலுவூட்டலுக்கும் சமூக அபிவிருத்திக்குமான அமைப்பின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாசிப்பீராக! 08



பிஸ்தாமி அஹமத்

# சிறந்த வாசிப்பு கலாசாரம் ஒன்றை கட்டி எழுப்புவோம்

வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில நடைமுறை ஒழுங்குகள்.

முஸ்லிம்களின் வேதநூலான புனித அல்குர்ஆன் தனது முதலாவது இறை கட்டளையாக "வாசிப்பீராக" எனும் ஏவலை அமைத்துக்கொண்டது.வாசிப்பு வாடையையற்ற ஒரு சூழலில் வாழும் மக்களை பார்த்து ஏன் இறைவன் அப்படி ஒரு வித்தியாசமான கட்டளையை இட்டிருக்க வேண்டும்? என்பதனை நாம் குடைந்து குடைந்து தேட வேண்டிய அவசியமில்லை. காரணம் வாசிப்பின் பலனும் பயனும் அந்தளவு விசாலமானது.

எமது சமூகம் வாசிப்பில் காட்டும் ஆர்வமும் புத்தகங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் ஆத்மார்த்த உறவு நிலையும் எமது சமூகத்தின் கல்விப்பின்னடைவின் மூலம் மிகவும் தெளிவாக ஊர்ஜிதம் செய்யபடுகிறது.

### நாம் ஏன் வாசிக்க வேண்டும்?

அது இறைவன் மூலம் எமக்கு விடுக்கப்பட்டுள்ள முதலாவது இறை கட்டளை.

வாசிப்பு மனிதனின் அறிவையும் ஆளுமையையும் விருத்தி செய்யும். அவனை பூரணமாக்கும். அவனது மொழியாற்றலை வளப்படுத்தும். சிந்திக்க தூண்டும். எழுத்தாக்கத்தை சிறப்பாய் அமைத்துவிடும். எழுதவும் பேசவும் தூண்டும். வாசிப்பு மனிதனை முழுமையாக்கும். வாசிப்பு மனிதனை நிதானப்படுத்தும். அறியாத விடயங்களை இனங்காட்டி அறிந்துகொள்ள வேண்டிய ஆசையை ஆர்வத்தை ஊட்டும். உற்சாகத்தை கொடுக்கும். தேடலுக்கான வாயிலை திறந்து கொடுக்கும். மொத்தத்தில் நேரம் வீணாக கழிவதில் இருந்து அவனை பாதுகாக்கும். வாழ்வை மிகவும் பயனுள்ள வகையில் திட்டமிட்டு ஒழுங்கமைக்க வழிவகுக்கும்.

### வசிப்பதற்கான ஆர்வத்தை யார் தூண்ட வேண்டும்?

இதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பலரும் பங்காளியாகின்றனர்.

மிகவும் சில விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

### கருவறையில்..

சிசு கருவாக இருக்கும் போதே தாய் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கம் பெற்றிருந்தால் பிறக்கும் குழந்தைக்கும் அது இயல்பான பிறவிப்பழக்கமாக மாறிவிடும். அது நாளடைவில் பிரியாத பழக்காமாக மாறிவிடும்.

### வீட்டில்...

சிறுவனோ பிள்ளைகளோ மாணவன் வளரும் பருவம் வீட்டில் நிகழ்கிறது.

வீட்டுச் சூழலில் வைத்து வாசிப்புக்கான ஆர்வம் எழும். பெற்றோர் மற்றும் சகோதரர்கள் வாசிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தால் இயல்பாகவே, வாசிக்கின்ற சூழல் வீட்டில் உருவாகும். புத்தகங்களை பரிமாறுகின்ற, அவை குறித்து கலந்துரையாடுகின்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும். புத்தக கலந்துரையாடலுக்கான அமர்வுகள் வீட்டில் இடம்பெற வேண்டும்.

### நண்பர்களுடன் ....

வீட்டுக்கு அடுத்தபடியாக சகபாடிகள் மற்றும் நண்பர்கள் காணப்படுகின்றனர். நல்ல நண்பர்களுடனான சகவாசம் அவனை சமூகத்தில் நல்ல நிலைக்கு கொண்டு செல்லும். இன்றைய நவீன உலகில் பதின்ம வயதினர் teen-agers வெகுவாக கவரப்படும் ஒரு விடயமாக போதைப்பொருள் பாவனையும் முறையற்ற சமூக ஊடக பாவனையும் அமைக்கப்பட்டுள்ளது.இது அவனது இளம்பருவ வாழ்வை சிதைத்து எதிர்கால வாழ்வையும் பாதித்துவிடும். இந்நிலையிலிருந்து விடுதலையாகி நெறிபிறழாத நிலைக்கு வரவேண்டும் என்றிருந்தால் அவர்களை நல்ல நிலைக்கு திசைதிருப்ப வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதை சிறந்த தீர்வாக முன்வைக்கலாம். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் நண்பர்கள் விடயத்தில் அவதானமாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும்.

### எதனை வாசிக்க வேண்டும்?

எல்லோரும் எல்லாவற்றையும் முழுமையாக வாசிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி வாசிக்க முனைவது பெரிய தவறும் இல்லை. ஒவ்வொருவரும் அவரவர் துறைகளை தெரிவு செய்யு முன் அடிப்படையான சில விடயங்களை வாசிக்க பழக வேண்டும்.

குறிப்பாக குழந்தை பருவத்தில் இருக்கின்ற ஆரம்ப நிலை மாணவர்கள் படங்கள் காட்சிகள் உள்ள புத்தகங்களில் வரும் சொற்களை அழகுற வாசித்து பழகினால் அடுத்தடுத்த கட்டத்தில் சற்று பெரிய நூல்களை வாசிக்கலாம். கதை நூல்களை வாசிக்கும் போது கதையின் உள்ளடக்கம் அவை கூறும் படிப்பினைகளை கிரகித்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் முதன்முதலில் தமது பாடநூலில் ஆர்வம் செலுத்த வேண்டும். பாடநூலில் முழுமையான ஆர்வம் செலுத்தும் போது இதர நூல்களுக்கு செல்வது இலகுவாக அமையும். ஆரம்பத்திலேயே மிகப்பெரிய நூல்களின் பக்கம் கவனத்தை கொண்டு செல்லக்கூடாது.

சில புத்தகங்கள் வயதுக்கும் பருவத்துக்கும் ஒவ்வாததாக அமையும். புத்தகத்தின் உள்ளடக்கத்தில் மட்டுமல்ல அதன் தலைப்பு மற்றும் பருமன் கூட சில பருவத்துக்கு ஒவ்வாததாக அமையும். கவிக்கோ அப்துர் ரஹ்மான் ஓரிடத்தில் "புத்தகங்களே கவனம் குழந்தைகளை கிழித்து விட வேண்டாம் " என்று அழகாக குறிப்பிடுவார். அடுத்து மகான்களின் வாழ்வு குறித்தான சிறிய கட்டுரைகள் நூல்களை வாசிக்கலாம்.

சின்னச்சின்ன ஆக்கங்களை வாசிக்கலாம்.

படிப்படியாக வயதுக்கும் வாசிப்பில் காட்டும் ஆர்வத்துக்கும் அமைவாக நூல்களின் உள்ளடக்க மற்றும் பருமனின் கனதியை அதிகரிக்கலாம்.

### எப்படி வாசிக்க வேண்டும்?

ஆரம்பத்தில் தனக்கு விருப்பமான நூல்களை தெரிவு செய்ய வேண்டும். அதனை ரசித்து வாசிக்க வேண்டும். முழுமையாக வாசிக்க வேண்டும். பெற்றோரிடம் அல்லது வாசிப்பில் ஆர்வமும் தேர்ச்சியும் உள்ள மூத்தவர்களிடம் ஆலோசனை பெற வேண்டும் வழிகாட்டல் பெற வேண்டும்.

கட்டம் கட்டமாக வாசிக்க வேண்டும். வாராந்தம் அல்லது மாதாந்தம் வாசிப்பதற்கு மிகவும் சிறந்த உகந்த நூல்களை அவர்கள் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### வீட்டு நூலகம் ....

வீட்டில் தனியான சிறிய நூலகம் ஒன்றேனும் இருக்க வேண்டும். அதில் பொருத்தமான நூல்கள் இருப்பது சிறந்தது. தற்காலத்தில் பத்திரிகைகள் நவடிவில் வந்தாலும் அன்றாடம் தினசரி பத்திரிகை ஒன்றை வாங்குவது உகந்தது. அவற்றின் தலைப்புச்செய்திகளை வாசிப்பது கொண்டு ஆரம்ப நிலை வாசகர்களின் வாசிப்பை ஊக்குவிக்க முடியுமாக இருக்கும்.

### வாசிப்பு சூழல் ....

வாசிப்பு சூழல் முழுமையாக அமைதியாக இருப்பது உகந்தது. விரும்பிய அமைப்பில் இருந்து வாசிக்கலாம். இரவில் வாசிக்கும் போது அதற்கான ஒழுங்குகளை பேணுவது சிறந்தது. குறிப்பாக தெளிவான வெளிச்சம் இருப்பது சாலச்சிறந்தது. குருட்டு வெளிச்சமும் மங்கலான வெளிச்சமும் வாசிப்பில் அலுப்பையும் வெறுப்பையும் ஒவ்வாமையையும் உண்டாக்கி விடும். பகலில் வாசிக்கும் போது அதற்கான விஞ்ஞான ஒழுங்குகளை பேணுவது சிறந்தது. வாசிப்பை வளமாக்கும் சில உத்திகள்.

மாதாந்தம் நீங்களே சிறு தொகை பணத்தை சேமித்து ஒரு புத்தகத்தை வாங்க ஏற்பாடு செய்யுங்கள்.

புத்தகங்களை பரிசாக கொடுங்கள். பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்.

புத்தகங்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளுங்கள். புத்தக கண்காட்சிகளுக்கு தவறாமல் செலுங்கள். பாடசாலையின் நூலகத்தில் அங்கத்தவராகுங்கள்.

ஊரில் உள்ள நூலகத்தில் அங்கத்தவராகுங்கள்.

### ஆசிரியர்களுக்கானது ....

உங்கள் மாணவர்களின் வாசிப்பை தூண்ட நீங்கள் முதலில் வாசியுங்கள்.


பாடத்துடன் தொடர்பான புதிய விடயங்களின் பால் அவர்களை ஈர்த்து விடுங்கள். அது உங்களுக்கும் பாடத்தை இலகுவாக கற்பிக்க உதவி செய்யும்.

நூலகள் குறித்து அவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

குறிப்பெடுக்க வழிகாட்டுங்கள்.

நீங்களே புத்தகங்களை பரிசளியுங்கள்.

இவை மிகவும் அடிப்படி நிலையில் அமைந்த வழிகாட்டல்களாகும் என்பதை மனதில் கொண்டு வாசிக்கும் கலாசாரத்தை உருவாக்க அத்திவாரமிடுங்கள்.




நாச்சியாதீவு பர்வீன்

# "ஆர்த்தெழும் பெண் குரல்கள்"

## - அவதானக்குறிப்பு -

(லரீனா ஹக்)


சிங்கள நாவல் இலக்கியமானது பௌத்த ஜாதகக் கதைகளின்வழி படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த உரைப்பாங்கான கதைகளின் பரிணாம வளர்ச்சியே என்ற வாதம் சிலரால் முன்வைக்கப்பட்டது. அவர்களில் பிரபல சிங்கள நாவலாசிரியரும் புலமையாளருமாகிய மார்டின் விக்ரமசிங்ஹ முக்கியமானவர். அவர், "புத்தரின் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட சமய, தத்துவ, சமூக மாற்றங்கள் முதலான பல்வேறு வளர்ச்சிநிலைகளின் பிரதிபலனாகவே பிரான்சிலும் இங்கிலாந்திலும் நாவல் இலக்கியம் வளர்ச்சி பெற்றது" (சிங்கள விச்சார மக, ப.58) என்பதோடு, "சிங்கள நாவல் இலக்கிய வடிவமானது சிங்கள மொழியின் வளர்ச்சியையும் பண்பாட்டையும் சிங்கள வாழ்வியலையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. எனவே, அது மேற்கிலிருந்து கடன்வாங்கிய ஆடை, மோட்டார் வண்டி, மின்விளக்கு போன்ற ஓர் உபகரணம் அல்ல. அது சிங்கள வாழ்வியல், அதன் சூழமைவு எனும் மரக்கிளையில் இருந்து எமது சுயாதீனமான மொழி எனும் வாளால் வெட்டியெடுக்கப்பட்ட சுயநிர்மாணம் எனும் பூங்கொத்தாகும்." (நவகதா வாதய, ப.19) எனவும் வலியுறுத்துகின்றார்.

தனது வாதத்துக்கு வலுசேர்க்கும் வகையில், சுமார் இரண்டாயிரம் வருடங்கள் பழமையான சிங்கள மொழி பாளி மற்றும் சமஸ்கிருத மொழிகளால் வளம்பெற்றதாகவும், குறிப்பாக புத்தர் பெருமானின் 550 பிறவிக் கதைகள் (ஜாதக கதா), சிங்கள நாட்டார் கதைகளின் ஒருவித பரிணாம வளர்ச்சியாகும் எனப் பல்வேறு உதாரணங்களை முன்வைத்து வாதிடுகின்றார். இதன்போது, "யதார்த்தவாதக் கோட்பா"ட்டினை அடியொட்டி எழுந்த மேலைத்தேய நாவல் இலக்கியத்தினை நெருங்கியதாக அனேகமான "ஜாதக கதா"கள் அமைந்துள்ளன என்கின்றார். குறிப்பாக, உமங்தா ஜாதகய முதலானவை, கதைப்பொருள் அடிப்படையில் அவை ஒத்த தன்மை உடையனவாகவும், விபரிப்புமுறையில் வேறுபடுவதாகவும் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில், சிங்களப் புலமையாளரும் படைப்பாளியுமான பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர தனது, "சிங்கள நாவல் வரலாறும் விமர்சனமும்" எனும் நூலில் இதுதொடர்பில் முன்வைக்கும் சில தகவல்கள் முக்கியமானவை. அவரது கருத்துப்படி, பெந்தொட்ட அல்பட் த சில்வாவினால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பல பாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டபின் 1894 ஆம் ஆண்டு முழுமையாக நூல்வடிவம் பெற்ற "ஆயிரத்து ஓர் இரவுகள்" (அராபி நிஷொல்லாசய) தற்கால சிங்கள இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்து, ஒரு பெரும் புரட்சியைத் தோற்றுவித்துள்ளது (சிங்கள நவகதா இதிகாசய ஹா விச்சாரய, ப.42). மேற்படி அரேபியக் கதைகளின் செல்வாக்குக்கு உட்பட்டதாக, அந்நூலின் மொழிபெயர்ப்பாளரால் எழுதி வெளியிடப்பட்ட "விமலா" (1892), "ஆதர ஹஸுன" (1892), "சிரிபரீ" (1894) ஆகிய மூன்று நூல்களும், எம். சீ. எஃப். பெரேரா விஜய சிரிவர்தனவால் புனையப்பட்ட "ஆலயே லீலய" (1906) கதையும் பல்வேறு விசித்திரமான சாகசச் சம்பவங்கள் கொண்டனவாய் அமைந்துள்ளமையும், சிந்துபாத் கதையின் பாதிப்பினால் அல்பட் த சில்வா எழுதிய "வெசக் தூதயா" (1894) எனும் கதையும் சரத்சந்திரரின் கூற்றை மெய்ப்பிப்பனவாகவே அமைந்துள்ளன. அத்துடன், 1886 இல் சி. தொன் பஸ்தியானினால் சிங்களத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட இராமாயணத்தின் செல்வாக்கும் "காதம்பரீ" முதலான சமஸ்கிருத உரைநடை இலக்கியங்களின் செல்வாக்கும் சிங்கள நாவல் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

-"ஆர்த்தெழும் பெண் குரல்கள்" நூலில் இருந்து...

வெளியீடு: புது எழுத்துப் பதிப்பகம்




## தொலைதல்!

பருவம்
பாலியம்
வாலிபம்
ஒரு கணம்
இரு கண்ணசைவு
சில .. மன இசைவு
பல.. பகுப்பாய்வு
அழைப்பு
அம்பலம்
அரங்கேற்றம்
சீர், செல்வம் ,சிறப்பு
பேரன்பு
பேறுகள்
பெருமைகள்

கர்வம்
கனம்
கம்பீரம்
டாம்பீகம்
நெஞ்சுரம்
நெருக்கடி
மன அழுத்தம்
மறதி
தளர்வு
தனிமை
தவிப்பு
மாத்திரை
நித்திரை
யாத்திரை
தரிப்பிடம்
காத்திருப்பு
சிறு புழுக்கம்
பெரும்..குழப்பம்
ஏற்ற இறக்கம்
பின் வளைவு
பயணம்
முடிவுறும் கணம்
நிறுத்தமென
இப்படித்தான்
முற்றுமாகிறது
வாழ்வென்று
தொலைதல்!

– ரோஷான் ஏ.ஜிப்ரி –

# அமானா வங்கி சாதனை மிகுந்த அரையாண்டு நிதி வளர்ச்சி பதிவு

அமானா வங்கி, 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு நிதிப் பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2023 ஆம்ஆண்டின் முதல் அரையாண்டில் பதிவாகியிருந்த நிதிப் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் பிரதான பிரிவுகளான இலாபம், முற்பணங்கள், வைப்புகள் மற்றும் மொத்த சொத்துகள் ஆகிய பிரதான பிரிவுகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது. தொழிற்துறையின் சராசரி பெறுமதிகளை விட சிறந்த ஊயுளுயு மற்றும் நிலை 3 மதிப்பிறக்க விகிதங்களையும் பேணியிருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில், வங்கி வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 1.35 பில்லியனை பதிவு செய்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 68ழூ வளர்ச்சியாகும். வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 763.4 மில்லியனாக பதிவாகியிருந்தது. கடந்த ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 419.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 82ழூ வளர்ச்சியாகும். இரண்டாம் காலாண்டில் மாத்திரம், வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் ஆகியன 63ழூ மற்றும் 72ழூ வளர்ச்சியை பதிவு செய்து, முறையே ரூ. 616.9 மில்லியன் மற்றும் ரூ. 341.1 மில்லியனை எய்தியிருந்தன.

ஆரோக்கியமான நிதி வசதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.3ழூ ஐ பேணியிருந்ததுடன், தேறிய நிதி வசதியளிப்பு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5ழூ இனால் அதிகரித்திருந்தது. 2023 ஜ/ன் 30 ஆம் திகதியன்று ரூ. 3.6 பில்லியனை எய்தியிருந்தது. இரண்டாம் காலாண்டில் மாத்திரம் இந்தப் பெறுமதி 9ழூ எனும் குறிப்பிடத்தக்களவு உயர்வை எய்தியிருந்தது. முதல் அரையாண்டு காலப்பகுதியில், வங்கியின் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் 9ழூ இனால் அதிகரித்து ரூ. 519.0 மில்லியனாகவும், மொத்த தொழிற்பாட்டு வருமானம் 1ழூ இனால் வீழ்ச்சியடைந்து ரூ. 4.4 பில்லியனாகவும் பதிவாகியிருந்தன. அந்நியச் செலாவணி ப்ரீமியம்களில் தொடர்ச்சியான வீழ்ச்சி காரணமாக தேறிய வியாபார வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இதில் தாக்கம் செலுத்தியிருந்தது. முன்னேற்றகரமான வியாபார சூழ்நிலைகள் மற்றும் தொழிற்படா முற்பணங்களை சிறந்த வகையில் நிர்வகித்திருந்தமை போன்றன காரணமாக, குறைந்த மதிப்பிறக்க கட்டணங்களை பதிவு செய்திருந்ததன் பின்னர், வங்கியின் தேறிய தொழிற்படு வருமானம் 34ழூ இனால் உயர்ந்து ரூ. 4.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையைாண்டு காலப்பகுதியில் ரூ. 3.0 பில்லியனாக பதிவாகியிருந்தது.

தொழிற்படு செலவுகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி காணப்பட்ட போதிலும், வங்கி தொடர்ந்தும் ஆரோக்கியமான அரையாண்டு வருமானத்துக்கான செலவு விகிதமான 51ழூ ஐ பேணியிருந்தது. நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக்கு முன்னதான தொழிற்படு இலாபம் 48ழூ வருடாந்த வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 1.8 பில்லியனை எய்தியது. வங்கியின் திரண்ட வரி பங்களிப்பு சுமார் 1.1 பில்லியனாக காணப்பட்டதுடன், வங்கியின் வரிக்கு முந்திய தொழிற்படு இலாபத்தில் 58ழூ பங்களிப்பை செலுத்தியிருந்தது. காலப்பகுதிக்கான மொத்த திரண்ட வருமானம் ரூ. 755.3 மில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 95ழூ வளர்ச்சியை எய்தியிருந்தது.





சந்தையில் நிதிவசதியளிப்புக்கான தொடர்ச்சியான போட்டி மற்றும் வைப்பு வீதங்களின் வீழ்ச்சி போன்றன காணப்பட்ட போதிலும், வங்கியின் மக்களுக்கு நட்பான வங்கியியல் மாதிரிக்கு அதிகளவு வரவேற்பு காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதனூடாக வாடிக்கையாளர் வைப்புகளில் 10ழூ எனும் வளர்ச்சியை பதிவு செய்யப்பட்டதுடன், 2024 முதல் அரையாண்டை ரூ. 146.3 பில்லியன் இருப்புகளுடன் நிறைவு செய்ய முடிந்தது. ஊயுளுயு விகிதம் 40ழூ எனும் உயர்ந்த நிலையில் காணப்பட்டது. மேலும், அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியின் வழிமுறையினூடாக, வாடிக்கையாளர் முற்பணங்களும் 10ழூ இனால் உயர்ந்து ரூ. 98.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. தொழிற்துறையின் குறைந்த நிலை 3 மதிப்பிறக்க நிதியளிப்பு விகிதமான 1.7ழூ ஐ பேணியிருந்தது. வங்கி முதல் அரையாண்டு காலப்பகுதியை ரூ. 173.6 பில்லியன் பெறுமதியான சொத்துகளுடன் நிறைவடையச் செய்திருந்தது.

2024 ஜ/ன் 30 ஆம் திகதியன்று, அமானா வங்கியின் பங்கொன்றின் தேறிய சொத்து பெறுமதி ரூ. 4.08 ஆக காணப்பட்டது. 2024 ஜ/லை மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட 10க்கு 1 எனும் ஒருமுகப்படுத்தலைத் தொடர்ந்து, இந்தப் பெறுமதி பங்கொன்றுக்கு ரூ. 40 எனும் நிலையை வெளிப்படுத்தியுள்ளது. ஆறு மாத காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ள நிலையில், வங்கியின் சுழுநு மற்றும் சுழுயு ஆகியன முறையே 7.0ழூமற்றும் 1.6ழூ வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதிகள் முறையே 5.8ழூமற்றும் 1.1ழூ வளர்ச்சியை பதிவு செய்திருந்தன.

2024 ஜ/ன் 30 ஆம் திகதியன்று, அமானா வங்கியின் பொது பங்கு நிலை 1 மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் போன்றன முறையே 15.4ழூ மற்றும் 18.1ழூ ஆக பதிவாகியிருந்தன. ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 7ழூ மற்றும் 12.5ழூ என்பதை விட உயர்ந்த நிலையில் காணப்பட்டன.

வங்கியின் அரையாண்டு நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் தவிசாளர் அஸ்கி அக்பராலி கருத்துத் தெரிவிக்கையில், "2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் அமானா வங்கியின் துரிதமான வளர்ச்சி என்பது, சவால்கள் நிறைந்த சூழலிலும் எமது உறுதியான வினைத்திறனை வெளிப்படுத்தியுள்ளது. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பொதுப் பட்டியலிடப்பட்டு ஒரு தசாப்த காலத்தை எய்தியுள்ள நிலையில், கடந்த ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொண்ட மூலதனமிடலுடன், இந்த ஆண்டின் பங்குகள் ஒருமுகப்படுத்தல் போன்றவற்றினூடாக, எமது பங்குதாரர்களுக்கு பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வங்கியின் உறுதியான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எமது சகல பெறுமதி வாய்ந்த பங்காளர்களுக்கும், இந்தப் பயணத்தில் ஆதரவளிக்கின்றமைக்காக நாம் நன்றியை தெரிவிப்பதுடன், மேலும் வளர்ச்சியை எய்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

## மனநலமும் ஆலோசனையும் 49

# செழிப்பு

செழிப்பு என்பது பொதுவாக பணம், பொருள் போன்ற செல்வத்துடன் சேர்ந்ததாக பார்க்கப்படுவதை நாம் காண்கிறோம். செல்வம் உள்ளவர் செழிப்பானவர் என்ற மனநிலை பல இடங்களில் இருப்பதும் மறுப்பதற்கில்லை. ஆனால் செழிப்பு என்பது செல்வத்தோடு மட்டும் தொடர்பானதல்ல. ஆரோக்கியம், மகிழ்ச்சி, உறவு எல்லாமே செழிப்புடன் தொடர்பானது. வெற்றியடைதல் என்பதும் செழிப்பை அடிப்படையாகக் கொண்டது.

செழிப்பு என்பது பணமாக இருக்கலாம் என்று நாம் நினைத்தால் அது செழிப்புக்கான நமது முதன்மை வரையறையாகவோ, வெற்றிக்கான முதல் வழியாகவோ இருக்கப் போவதில்லை.

நாம் உலகில் வாழும் காலமெல்லாம் பயனும் பெறுமதியும் உள்ள நடத்தைகளால் அழகான தாக்கத்தை இந்த மண்ணில் ஏற்படுத்தி புத்திசாலியாக வாழும் முறையை உருவாக்குவது நம்மை செழிக்க வைக்க அனுமதிக்கும் அடிப்படை விடயங்களாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள்...

பயனுள்ள அறிவைப் பெறுதல்

சீரான சிந்தனைகளை உருவாக்குதல்

பொருத்தமான நடத்தைகளை வெளிப்படுத்தல்

விரும்பும் இலக்குகளை அடைதல்

அழகான, ஆக்கப்பூர்வமான வாழ்க்கையை வாழ்தல்

எங்கள் குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் தேசத்திற்கு வளமான எதிர்காலத்தை உருவாக்குதல் போன்ற அனைத்தும் செழிப்புடன் தொடர்பானதாகும். இவை ஒவ்வொன்றிலும் செழிப்பு இருக்க வேண்டும்.

மனித வளர்ச்சியின் முக்கியமான அம்சமே செழிப்புடன் வாழ்வதாகும். மனித வளர்ச்சியும் செழிப்பும் ஒன்றோடொன்று கைகோர்த்து பயணிக்கிறது.

மனிதன் வளர்ச்சியடையும் போதே செழிப்பும் படிப்படியாக அவனுக்குள் உருவாக வேண்டும். உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்காக ஊக்கம் உற்சாகம் கொடுக்கப்படவும் வேண்டும். எங்கு சரியான வளர்ச்சி இருக்குமோ அங்கு நிறைவான செழிப்பு இருக்கும்.

செழிப்பு என்பது ஒரு மாமரத்திற்கு ஒத்ததாக இருந்தால், அது எங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமக்கு வேண்டிய மாங்கனிகளை வழங்க வேண்டும். வளர்ச்சி என்பது அந்த மாமரம் வளர தேவையான செயல்பாடுகளை நாம் செய்வதாகும். எங்கள் குடும்பமும் நண்பர்கள் வட்டமும் எவ்வளவு விரிவாக இருக்குமோ அந்தளவு மாமரம் பெரிதாக இருக்க வேண்டும். வளர்ச்சியும் செழிப்பும் எவ்வளவு ஒன்றுக்கொன்று முக்கியம் என்பதை இதிலிருந்து புரியலாம்.

எங்களில்

சிந்தனை செழிப்பு

அறிவியல் செழிப்பு

நடத்தை செழிப்பு

நாம் பேசும் மொழியில் செழிப்பு

எங்கள் முகபாவனையில் செழிப்பு

இப்படி எங்கள் வாழ்வில் எல்லா நல்ல காரியங்களிலும் செழிப்பு என்பது கட்டாயம் இருக்க வேண்டியுள்ளது.

நாமும் எமது நாட்டில் வளர்ந்து வரும் மக்கள் தொகையும் தற்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்ந்து வளர வேண்டி இருக்கிறோம்.

புதிய அறிவை பெறுவதில்,

நல்ல திறன்களை வளர்ப்பதில்,

நல்ல மாற்றங்கள் நிகழ்த்துவதில்

நாம் ஆசையும் ஆர்வமும் காட்ட வேண்டி இருக்கிறோம். அப்போது தான் எங்களில் நல்ல வளர்ச்சி உருவாகத் தொடங்கும். நல்ல வளர்ச்சி நல்ல செழிப்பை ஏற்படுத்தி விடும்.

வளர்ச்சி இல்லாமல் செழிப்பு எந்த வகையிலும் கிடைக்கப் போவதில்லை. எங்கள் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அழகான வளர்ச்சியை ஏற்படுத்துவதும் அதற்காக உழைப்பதும் எமது கடமையாகும்.

நாம் ஆதாயம் பெற வேண்டுமானால் நாம் உழைத்தாக வேண்டும். மற்றொருவரின் செலவிலும் உழைப்பிலும் இருந்து பெறப்படும் இலாபம் எமக்கு உண்மையான சொந்தமாக இருக்கப் போவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்

# பெண் குழந்தை பெற்று விட்டோமே...

*பெண் குழந்தை*
*பெற்று விட்டோமே...*
*தங்கம் வாங்கிச் சேர்க்கவேண்டும்*
*நிலம் வாங்கி சேர்க்க*
*வேண்டும்*
*செலவை குறைத்து*
*சேமித்த பணத்தை*
*வங்கியில் போட*
*வேண்டும்*
*என்று*
*ஏங்கித்*
*தவிக்காதீர்கள்*
*தூக்கம் மறந்து*
*துவளாதீர்கள்*
*துக்கம்*
*கொள்ளாதீர்கள்*

*நீங்கள் ஆற்ற*
*வேண்டியது*
*ஒன்றே ஒன்று தான்...*
*பெண் பிள்ளைகளுக்கு*
*நல்ல கல்வியைக் கொடுங்கள்*

*எதையும் எதிர்த்து*
*ஏறி மிதித்து வாவென்று*
*தன்னம்பிக்கையை கொடுங்கள்*
*விரும்பிய படிப்பை படிக்க*
*வையுங்கள்*
*இசை பயில, நடனம் பயில*
*தற்காப்பு கலைகள் பழக*
*ஆர்வமாயிருந்தால்*
*அதற்கான வழிகளை செய்து*
*கொடுங்கள்.*

*இன்னொரு வீட்டில்*
*இல்லத்தரசியாய் வாழப்*
*போகிறவள் தானே என்று*
*சமையல் பழக்குவதை விடவும்*
*சட்டி பானை கழுவப்*
*பழக்குவதை விடவும்*
*தையல் பழக்குவதை விடவும்,*



*பிரச்சனைகளின் போது*
*எப்படி மீள வேண்டும்*
*பிரிவுகளின் போது*
*தனித்து எப்படி வாழ*
*வேண்டுமென்று*
*தைரியத்தை சொல்லிக்*
*கொடுங்கள்*

*அதட்ட வேண்டிய நேரம்*
*அதட்டி வளருங்கள்..*
*தட்டிக் கொடுக்க வேண்டிய*
*நேரம்*
*தட்டிக் கொடுங்கள்*

*பெண்ணுக்கு அறிவை விடவும்,*
*தங்கமோ நிலமோ பெரியதில்லை*
*படிப்பிருந்தால்*
*தங்கமும் நிலமும் பணமும்*
*தானாய் வந்து கதவு தட்டும்*

*உங்கள் வளர்ச்சியைக் கண்டு*
*உலகம் கைகள் தட்டும்*

*சிறப்புடன் வாழ*
*சிரிப்புடன் வாழ வைப்போம்..*

*மங்கையராய் பிறப்பதற்கே நல்ல*
*மாதவம் செய்திட*
*வேண்டுமம்மா...!*

## கணவன் மனைவி மட்டும் படிங்க....!
## யார் முதலில் பேசுவது என்று தயங்காதீர்கள்....
## முதலில் பேசுவது நீங்களாக ஏன் இருக்ககூடாது?

அன்று அவர்கள் திருமண நாள்.
திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகள் ஓடி விட்டன.
ஆரம்பகாலத்தில் இருந்த பரஸ்பர அன்பு குறைந்து விட்டது
எல்லாவற்றுக்கும் விவாதம்
சின்னச்சின்ன விஷயங்களுக்குக் கூடச் சச்சரவு என வாழ்க்கை மாறித்தான் போய் விட்டது.
ராதா காத்திருந்தாள்,கணவன் ராஜாவின் வருகைக்காக.
அவன் இன்று திருமண நாள் என்பதை நினைவில் வைத்திருப்பானா?
ராதாவுக்கு நம்பிக்கை இல்லை.
இருப்பினும் ஓர் அற்ப ஆசை,அவன் பரிசோடு வந்து ஆச்சரியப்படுத்த மாட்டானா என்று!
வெளியில் மழை வேறு .
ராதா காத்திருந்தாள்
அழைப்பு மணி ஒலித்தது.
ராதா ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்......
கையில் ஒரு பரிசுப் பொட்டலத்துடன் மழையில் நனைந்த கோலத்தில்...... ராஜா!
“இனிய மண நாள் வாழ்த்துகள், அன்பே ”
அவள் அவனை அணைத்க்கொண்டாள்.
மகிழ்ச்சி வெள்ளம்!
உள்ளே சென்றனர்.
அவன் தலையைத் துவட்டி விட்டாள்
மாற்று ஆடை கொடுத்தாள்
சூடான காபி தயாரித்துக் கொடுத்தாள்.
இருவரும் அந்தக்காலம் திரும்பி வந்தது போல் கொஞ்சியவாறு பேசத் துவங்கினர்.
அடுத்த அறையிலிருந்த் தொலைபேசி அலறத் தொடங்கியது.
சலிப்புடன் எழுந்தாள் ராதா...”சே!
சிவ பூஜையில் கரடி மாதிரி!இது வேற”
எடுத்தாள்.
ஆண்குரல்,
“ஹலோ! இது ராஜா அவர்களின் வீடா?”
“ஆமாம்.”, “நாங்கள் டி–1 காவல் நிலையத்தில் இருந்து பேசுகிறோம்.
ஒரு சாலை விபத்தில் ராஜா இறந்து விட்டார்.
அவர் பர்சில் இருந்த விசிடிங் கார்டிலிருந்து எண்ணைத் தெரிந்து கொண்டோம்.
வருந்துகிறோம் அம்மா.”
ராதாவுக்கு மயக்கம் வருவது போல் இருந்த்து!
இது எப்படி?
அடுத்த அறையில் கணவன் இருக்கிறானே!
ஒரு வேளை........
தன்னைப் பார்க்க வரும்போது இறந்த கணவனின் ஆவி அவளைத் தேடி வந்து விட்டதோ?
மேலுலகம் செல்லுமுன் அன்புக்குரியவரைக் காண ஆவி வரும் என்று கேள்விப்பட்டி ருக்கிறாள்
அடுத்த அறைக்கு ஓடினாள்
அங்கு.....
அவன் இல்லை!
உண்மைதான்
அவன் போய் விட்டான்.
பழைய வாழ்க்கையை மீண்டும் தொடங்கியிருக்கலாமே!
என்ன செய்வேன்.?
நான் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பின்றி போனதே ”
அழத் தொடங்கினாள்
அப்போது...........
கழிப்பறைக்கதவு திறந்தது.....
ராஜா வெயே வந்தான்
”ராதா! சொல்ல மறந்துட்டேன்.
இன்னிக்கு என் பர்ஸ் தொலைந்து போய் விட்டது.
நல்ல வேளை ஏடிஎம் அட்டையெல்லாம்
என் கைப்பயில் வைத்திருந்தேன்!”



அரபாத் பஹுர்தீன்

# சதங்களில் சாதனை படைத்த கமிந்து மெண்டிஸ்



இலங்கையின் மத்திய வரிசை துடுப்பாட்ட நட்சத்திரமான கமிந்து மெண்டிஸ் மிக வேகமாக ஐந்து டெஸ்ட் சதங்களை அடித்த ஆசிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக காலியில் இடம்பெற்ற 2ஆவதும் இறுதியுமான போட்டியில் கமிந்து மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களைப் பெற்றார். இதன் காரணமாக கமிந்து மெண்டிஸ் தனது 13ஆவது டெஸ்ட் இன்னிங்ஸில் 5ஆவது சதத்தை பூர்த்தி செய்து இந்த சாதனையை எட்டினார்.

இதன் மூலம், 25 வயதான கமிந்து மெண்டிஸ் முன்னாள் அஸ்திரேலிய வீரரும் உலகப்புகழ்பெற்ற துடுப்பாட்ட வீரருமான டான் பிராட்மெனின் சாதனையை சமன் செய்தார், பிராட்மென் 13 இன்னிங்ஸ்களில் ஐந்து சதங்களை எட்டினார்.

அத்துடன் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரரான ஜார்ஜ் ஹெட்லியுடன் இடத்தைப் பகிர்ந்து கொண்ட மெண்டிஸ் இப்போது உலகளவில் கூட்டு மூன்றாவது வேகமான 5 சதம் விளாசிய வீரர் ஆவார்.

ஆசியாவில் இந்த சாதனையானது பாகிஸ்தானின் வீரர் ஃபவாத் அலாமின் வசமிருந்தது. அவர் 22 இன்னிங்ஸ்களில் ஐந்து டெஸ்ட் சதங்கள் அடித்தமையே சாதனையாக இருந்தது. இச் சாதனையையே கமிந்து மெண்டிஸ் வெறும் 13 இன்னிங்களில் அடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

மேலும் இதுவரை இலங்கைச் சாதனையாக இருந்த அரவிந்த டி சில்வாவின் (38 இன்னிங்ஸ்களில்) சாதனையும் கமிந்துவினால் தகர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் உலக அளவில் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வவீரரான எவர்டன் வீக்ஸ் 10 இன்னிங்ஸிலும், இங்கிலாந்தின் ஹெர்பர்ட் சட்க்ளிஃப் 12 இன்னிங்ஸிலும் 5 சதங்களை விளாசி முதல் இரு இடங்களில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ரி20 மற்றும் ஒருநாள் தொடருக்காக இலங்கை வரும் மேற்கிந்தியத் தீவுகள்




மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட இரு தொடர்களில் பங்கேற்கவுள்ளது.

அதற்கமைய அத் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தது.

அதன்படி இரு அணிகளுக்கும் இடையில் முதலில் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் நடைபெற உள்ளது. அதைத்தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதில் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் ஒக்டோபர் 13ஆம் திகதி ஆரம்பிக்கின்றது. அதே போன்று ஒருநாள் தொடர் ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பிக்கின்றது.

அதற்கமைய முதல் ரி20 போட்டி ஒக்டோபர் 13ஆம் திகதியும், 2ஆவது போட்டி ஒக்டேபர் 15ஆம் திகதியும் , 3ஆவது மற்றும் இறுதி போட்டி 17ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. இம் மூன்று போட்டிகளும் தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இரவுப் போட்டிகளாக இடம்பெறவுள்ளது.

அதே போன்று ஒருநாள் தொடரின் முதல் போட்டி ஒக்டோபர் 20ஆம் திகதியும், 2ஆவது போட்டி ஒக்டோபர் 23ஆம் திகதியும் 3ஆவதும் இறுதியுமான போட்டி ஒக்டோபர் 26ஆம் திகதியும் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவுப் போட்டிகளாக இடம்பெறவுள்ளது.

**இலங்கைஎதிர் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான போட்டி அட்டவணை விவரம்:**

**ரி20 தொடர்:**

முதல் போட்டி – ஒக்டோபர் 13 – தம்புள்ள
2வது போட்டி – ஒக்டோபர் 15 – தம்புள்ள
3வது போட்டி – ஒக்டோபர் 17 – தம்புள்ள

**ஒருநாள் தொடர்:**

முதல் ஒருநாள் போட்டி –ஒக்டோபர் 20 – பல்லேகல
2வது ஒருநாள் போட்டி – ஒக்டோபர் 23 – பல்வேகல
3வது ஒருநாள் போட்டி – ஒக்டோபர் 26 – பல்லேகல

# இன்னிங்ஸ் வெற்றியுடன் நியூஸிலாந்துக்கு எதிராக 15 வருடங்களின் பின் டெஸ்ட் தொடரை வென்றது இலங்கை




நியூஸிலாந்து அணிக்கு எதிரான 2ஆதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கமிந்து, குசல் மற்றும் சந்திமால் ஆகியோரின் அசத்தல் சதங்களும், பிரபாத் ஜெயசூரிய மற்றும் நிஷான் பீரிஸ் ஆகியோரின் மிரட்டும் சுழல்பந்துவீச்சின் உதவியுடன் இன்னிங்ஸ் மற்றும் 154 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி 15 வருடங்களின் பின்னர் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 2:0 என தொடரை வெற்றி கொண்டு அசத்தியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக இடம்பெற்ற 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் கடந்த 26ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பித்த 2ஆதும் இறுதியுமான போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்திருந்தது. இப்போட்டியில் இலங்கை அணி சார்பில் சுழல்பந்து வீச்சாளரான நிஷான் பீரிஸ் அறிமுக வீரரான அணயின் உள்வாங்கப்பட்டிருந்தார்.




அதற்கமைய முதல் இன்னிங்ஸ்ல் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி கமிந்து மெண்டிஸ் பெற்றுக் கொடுத்த ஆட்டமிழக்காத 182 ஓட்டங்கள், குசல் மெண்டிஸ் பெற்ற ஆட்டமிழக்காத 106 ஓட்டங்கள் மற்றும் சந்திமால் பெற்ற 116 ஓட்டங்கள் அத்துடன் மெத்யூஸ் பெற்ற 88 ஓட்டங்களின் உதவியுடன் 163.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 602 ஓட்டங்களைப் பெற்றிருக்க ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது, பந்துவீச்சில் கிளென் பிலிப்ஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த நியூஸிலாந்து அணியின் விக்கெட்டுக்களை இலங்கையின் சுழல்பந்துவீச்சாளர்களான பிரபாத் ஜெயசூரிய மற்றும் நிஷான் பீரிஸ் ஆகியோர் அள்ளிச் சுருட்ட வெறும் 88 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது நியூஸிலாந்து அணி. துடுப்பாட்டத்தில் மிச்சல் சாண்ட்னர் அதிகபட்சமாக 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 6 விக்கெட்டுக்களையும், நிஷான் பீரிஸ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனால் இலங்கை அணியை விட முதல் இன்னிங்ஸில் விட 514 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸில் பின்னிலை பெற்றமையால் இலங்கை அணி நியூஸிலாந்து அணிக்கு பளோஓன் முறையில் 2ஆவது இன்னிங்ஸை ஆட சந்தர்ப்பத்தை வழங்கியது.

இதற்கமைய 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பாட்டக் களம் நுழைந்த நியூஸிலாந்து அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழக்கப்பட இந்த இன்னிங்ஸிலும் இலங்கையின் சுழல்பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் மேலோங்க நியூஸிலாந்து அணி 360 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் பிளிப்ஸ் 78 ஓட்டங்களையும், சாண்ட்னர் 67 ஓட்டங்களையும், கொன்வே 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவவீச்சில் அறிமுகப் போட்டியில் பங்கேற்ற நிஷான் பீரிஸ் 6 விக்கெட்டுக்களையும், பிரபாத் ஜெயசூரிய 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதற்கமைய ஒரு இன்னிங்ஸ் மற்றும் 154 ஓட்டங்களால் இலகு வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை 2:0 என வெற்றி கொண்டு அசத்தியது.

அத்துடன் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 15 வருடங்களின் பின்னர் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டமை விஷேட அம்சமாகும். இப்போட்டியின் நாயகனான 182 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்ற கமிந்து மெண்டிஸ் தெரிவானதுடன், தொடரின் நாயகனாக 18 விக்கெட்டக்களை அள்ளிச் சுருட்டிய பிரபாத் ஜெயசூரிய தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.